திருமலை திருப்பதி தேவஸ்தானம்

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:11, Pages:56
JUNE-2025, Price Rs.20/-

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூன் 2025,
விலை ரூ.20/-



## திருப்பதி
## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 02-06-2025 முதல் 10-06-2025 வரை

ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம் ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள். பிரம்மோத்ஸவத்தின் ஒரு பகுதியாக 11-04-2025 அன்று நடைபெற்ற திருக்கல்யாண உத்ஸவத்திற்கு ஆந்திர மாநில அரசு சார்பில் பட்டு வஸ்திரங்களைச் சமர்ப்பித்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு தம்பதியினர் உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள்.

















*அவ்யக்தோऽயமசிந்த்யோऽயம்*
*அவிகார்யோऽயமுச்யதே।*
*தஸ்மாதே$_3$வம் விதி$_3$த்வைநம்*
*நாநுசோசிதுமர்ஹஸி॥*


இந்த ஆத்மா புலன்களுக்குப் புலப்படாதது; மனத்தால் சிந்திக்க முடியாதது; மேலும், மாறுதல் இல்லாதது என்று கூறப்படுகிறது. ஆகையால், அர்ஜுனா! இந்த ஆத்மாவை மேலே கூறியவாறு அறிந்து கொண்டு, நீ வருத்தப்படுவது உசிதமில்லை.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–25*

*வந்தாய்போலேவாராதாய் வாராதாய்போல் வருவானே!*
*செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதே! எனதுயிரே!*
*சிந்தாமணிகள் பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே!*
*அந்தோ! அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையுமே*

கைக்கு எட்டினாற் போலேயிருந்து எட்டாதவனே! எட்டாதவன் போலிருந்து கிட்டி நிற்பவனே! செந்தாமரைப் போன்ற திருக்கண்களையும், செங்கனி போன்ற திருப்பவளத்தையும், நான்கு திருத்தோள்களையுமுடைய பரம போக்கியனே! எனக்கு உயிரானவனே! சிறந்த இரத்தினங்களின் ஒளியானது இரவையும் பகலாக்குமிடமான திருமலையில் வாழ்பவனே! ஐயோ உனது திருவடிகளை அடிமைச் சுவடறிந்த நான் ஒரு நொடிப் பொழுதும் பிரிந்திருக்க வல்லேனல்லேன்.

*–நம்மாழ்வார்*







ஸப்தகிரிக்கு சந்தா செலுத்திடுங்கள்!!
ஸப்தகிரிவாசனின் அருளைப் பெற்றிடுங்கள்!!

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- "ஸப்தகிரி" திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- "ஸப்தகிரி" இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- "ஸப்தகிரி" இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- "ஸப்தகிரி" இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/–, ஆயுள் சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/–
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஒ., ஐ.பி.ஒ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- "ஸப்தகிரி" சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- "ஸப்தகிரி" இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

மேலும் தகவல்களுக்கு :
0877- 2264543, 2264359

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூன் 2025

மலர் 04 இதழ் 11



சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
பி.ஜி. டிப்ளமா இன் எப்பிக்ராபி, டிப்ளமா இன் யோகா
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்,
தி.தி.தேவஸ்தான அச்சகம் & விற்பனை நிலையம், திருப்பதி.
டி.டி.பி. பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்

## உள்ளுறை

பக்கம்

மலையப்பா உன்னைப் பார்க்க முடியவில்லையே — 7
-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.

நந்தவன சிறப்பை உணர்த்தும் ஆழ்வார்கள்
- திரு.சதா ஹரிஹரன், கும்பகோணம். — 11

உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் — 14
- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: ஸ்ரீஅர்த்த நாரீஸ்வரர்
-படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. — 16

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். — 18

108 திவ்வியதேச வைபவம் : திருக்கடிகை — 21
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

தாக்கி எறிவோம் - திருமதி எம்.நிர்மலா, புதுச்சேரி. — 26

பூரி தேர்த் திருவிழா - திரு.நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். — 31

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : கூரத்தாழ்வான் — 34
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

வைகாசி விசாகத் திருவிழா — 38
- திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம், கல்லிடைக்குறிச்சி.

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: பகாசுரன் — 43
- திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.

ஆயுர் வேதம்: கோதுமை -திருமதி வி.உஷா, திருப்பதி. — 46

ராசிபலன்கள் : ஜூன் 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். — 47

நீதிக்கதை: இராமடம் ஊட்டுதல் — 48
- கீர்த்திமூர்த்தி ஸ்ரீராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமி, சென்னை.

சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி — 49

சித்திரக்கதை : கண்ணனின் திருலீலை — 52

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருப்பதி.

பின்னட்டை : உபய தேவியருடன் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி, அப்பளாயகுண்டா.

உங்களுடன்

# "யோகா"
# ஆரோக்கியத்திற்கு ஒரு வழிகாட்டி

நம்முடைய பழமையான பாரம்பரிய பண்பாட்டில் பிறந்த சிறந்த பொக்கிஷங்களில் "யோகா"வும் ஒன்றாகும். இந்திய ரிஷிகளின் தபோபலமான யோக சாஸ்திரம் உலகமனைத்திற்கும் சாந்தி, ஆரோக்கியம், ஆத்மசுத்தி போன்றவற்றை அளிப்பதற்கான வழிகாட்டியாக அமைந்துள்ளன என்று கூறினால் அது மிகையாகாது. யோகா என்பது உடற்பயிற்சி அன்று. அது மனம், உடல், ஆத்மா என அனைத்தையும் ஒருங்கிணைப்பதற்கான வழிகாட்டி ஆகும்.

யோகா எனும் சொல் சமஸ்கிருதத்தில் யுஜ் எனும் வேரில் இருந்து பிறந்தது. இதற்கு ஒருங்கிணைத்தல் என்று பொருள்படும். "யுஜ்யதே இதி அனே நயோக", "யுஜ்யதே ஏ ததிதி யோக:" எனும் வாக்கியத்தை கவனித்தோமேயானால் புலன்களை வசப்படுத்தி, மனதினை இறைவன்பால் வைப்பதே யோகா ஆகும்.

"ஆதிசேஷனின் திருவம்சமான" – பதஞ்சலி மஹரிஷி யோக சாஸ்த்ர வல்லுநர். தன்னுடைய யோக சாஸ்திரத்தில் "யோக: சித்த வ்ருத்தி நிரோத:" அதாவது மனதினை சஞ்சலத்திலிருந்து விடுவிப்பதே யோகாவின் முதன்மை இலட்சியமாகக் கருதினார்.

யோகா என்பது முழுமையான வாழ்க்கை முறையாகும். மானிட வாழ்விற்கு இது ஒரு திவ்ய ஔஷதம். இன்றைய நவீன கால ஓட்டத்தில் வாழ்வியல் நடைமுறை, மன அழுத்தம் மற்றும் உடல் குறைபாடுகளுக்கு யோகாவின் முக்கியத்துவம் பெருகியுள்ளது. பிராணாயாமம் மற்றும் தியானம் மனதில் சமநிலையையும் உடல் உறுதியையும் தருகிறது.

யோக சாஸ்திரத்தை புத்தக வடிவில் அனைவருக்கும் அளித்திட எண்ணி திருமலை திருப்பதி தேவஸ்தானம் "யோக சர்வஸ்வமு"(தெலுங்கு), மாத்ருஶ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா எழுதிய "அஷ்டாங்க யோக சாரமு"(தெலுங்கு) போன்ற புத்தகங்களை பக்தர்களுக்கு வெளியிட்டுள்ளது யோகாவின் மீதான ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும்.

இந்த அற்புதமான தார்மீக அறிவினை உலகிற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியில் 2015ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் தேதியை முதல் முறையாக சர்வதேச யோகா தினமாகக் கொண்டாடப்பட்டது. இவ்வாறாக யோகாவின் சிறப்புகளைப் போற்றி உலகம் முழுவதும் ஆரோக்கியம் மற்றும் மானசீக கலாச்சாரத்தை மேம்படுத்த எண்ணுவதேயாகும்.

யோகா என்பது உண்மையை நோக்கிய பயணம், வாழ்வியல் வழிகாட்டி. "லோகா: சமஸ்தா: சுகினோ பவந்து" என்னும் ஆன்மீகச் சித்தாந்தத்தின் அடிப்படை மந்திரம் ஆகும். இந்த யோகா தினத்தினை முன்னிட்டு ஒவ்வொருவரும் நமது அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கொண்டு குறைந்தபட்சம் சிறிது நேரம் ஒதுக்கி ஆத்ம சுத்தியையும், ஆரோக்கிய விருத்தியையும் பெற்றிடுவோம்.

மேலும், சகல யோகத்தை அளிக்கவல்ல அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான திருமலையப்ப ஸ்வாமிக்கு ஜ்யேஷ்டாபிஷேகம் இந்த மாதத்தில் திரயோதசி முதல் பௌர்ணிமி வரை வைகானச ஆகமப்படி நடைபெறும். இந்த அபிஷேகத்தை கண்டுகளித்து ஶ்ரீநிவாசனின் திவ்ய அருளைப் பெற்றிடுவோம்.

இந்த ஜ்யேஷ்ட மாதத்தில் பரம யோகிகளான நம்மாழ்வாரின் அவதார திருநட்சத்திரம் வருகின்றது. அதேபோன்று பெரியாழ்வாரின் திருநட்சத்திர உத்ஸவமும் துவங்குகிறது. இவ்விரு ஆழ்வார்களையும் நினைவு கூறுவதும் ஒரு யோகமேயாகும்.

இம்மாதத்தில்தான் பூரி திருத்தலத்தில் யோகத்தை போதித்த ஶ்ரீஜெகந்நாதப் பெருமானின் இரத யாத்திரையும் கோலாகலமாக நடைபெறுகிறது. பூரி திருத்தலம் ஒற்றுமையின் சின்னமாக அமைந்துள்ளது. அதனால்தான் "சர்வஞ்ஜகந்நாததமயம்" என்று கூறி அப்பெருமானையும் துதித்து சகல யோகத்தையும்ப் பெறுவோம்.

**வை**காசி மாதம் உயர்ந்த மாதம். விசாக நட்சத்திரம் உயர்ந்த நட்சத்திரம். ஏன் இந்த மாதத்தை யும், நட்சத்திரத்தையும் உயர்ந்தது என்று சொல்கின் றோம்? காரணம், இந்த மாதத்தில் (வைகாசி)இந்த நட்சத்திரத்தில் (விசாகம்)தான் நம்மாழ்வார் அவதரித்தார். மாமுனிகள் தமது உபதேச ரத்தின மாலையில் வைகாசி விசாகத்தின் ஏற்றத்தையும், நம்மாழ்வாரின் ஏற்றத்தையும் இரண்டு பாசுரங்களில் பாடுகின்றார். அதில் முதல் பாசுரம் இது.

*ஏரார் வைகாசி விசாகத்தி னேற்றத்தை*
*பாரோ ரறியப் பகர்கின்றேன்- சீராரும்*
*வேதம் தமிழ்செய்த மெய்யனெழில் குருகை*
*நாத னவதரித்த நாள்.*

இதில் சுவாமி நம்மாழ்வாரை மெய்யன் என்று குறிப்பிடுகின்றார். ஸ்ரீமந்நாராயணனுக்கும் மெய்யன் என்று திருநாமம். மெய் என்றால் சத்தியம். திருமெய்யம் எனும் திருத்தலம் இருக்கிறது. மூலவருக்கு சத்யகிரி நாதன் என்றும், உற்சவருக்கு மெய்யப்பன் என்றும் திருநாமம். சுவாமி நம்மாழ்வா ரும் பகவத் சொரூபமாகவே கிருஷ்ண தத்துவமாக அவதரித்ததால் மாமுனிகள் "எழில் குருகை மெய்யன்" என்று குறிப்பிடுகின்றார்.

மெய்யன் என்றால் உள்ளதை உள்ளபடி நேர்மையுடன் சொல்லுதல் என்று பொருள். உள்ளது உள்ளபடி என்றால் அது வேதத்தைக் குறிக்கும். வேதத்துக்குச் சீர்மையாவது, அபௌருஷேயத்வம் (யாராலும் இயற்றப்படாதது), நித்யத்வம் (எப்பொழுதும் இருப்பது), ஸ்வத ப்ராமாண்யத்வம் (தானே தனக்கு ஆதாரமாக இருப்பது) போன்றவை. மேலும், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூப, ரூப, குணங்களையே பேசுவதாக இருப்பது வேதத்தின் பெருமை.

வடமொழி வேதம் தெளியாத மறை. திருவாய் மொழியோ தெளிந்த மறை. ஆழ்வார் வேதம் தமிழ் செய்கிற மாறன் அல்லவா! திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்று நான்கு வேத சாரங்களை, சகல உபநிடதங்க ளின் சாரமாக, நாம் அனைவரும் புரிந்து கொள்ளும் படி அருளிச்செய்தது நம்மாழ்வார் அல்லவா. அதனால் மெய்யன் என்று கொண்டாடுகின்றார்.

அடுத்த பாசுரம் இன்னும் பிரமாதம். ஆழ்வார் சம்மந்தப்பட்ட மாதம், நட்சத்திரம், ஊர் மூன்றையும் சொல்லி, இதைவிட உயர்வான ஒன்று இருக்க

# மலையப்பா! உன்னைப் பார்க்க முடியவில்லையே!



-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

முடியுமா? என்று கேள்வி கேட்கிறார். அந்தக் கேள்விக்குப் பதில் ‘இல்லை’ என்பதுதான். கேள்வி யிலே பதிலும் மறைந்திருக்கிறது.

*உண்டோவை காசி விசாகத்துக்*
*கொப்பொருநாள்?*
*உண்டோ சடகோபர்க் கொப்பொருவர்?-*
*உண்டோ*
*திருவாய்மொழிக் கொப்பு தென்குருகைக்*
*குண்டோ*
*ஒருபார் தனிலொக்கு மூர்.*

வைகாசி விசாகத் திருநாளுக்கு ஒப்பாக ஒரு நாளுண்டோ? நம்மாழ்வாருக்கு ஒப்பாக ஒருவர் உண்டோ? (ஸர்வேச்வரனும், நித்யர்களும், முக்தர்களும், இவ்வுலகத்தவர்களும் ஒப்பாக மாட்டார்கள்) திருவாய்மொழிக்கு ஒப்பான ஒரு ப்ரபந்தம் தான் உண்டோ? (கிடையாது). வேதத்தின் ஸாரதமமான விஷயமான பகவத் விஷயம் பற்றி மட்டுமே பேசுகி றது திருவாய்மொழி என்பதால் வேதத்தை விட ஒரு படி உயர்ந்தது. திருவாய் மொழிக்கு அதனால் பகவத் விஷயம் என்று பெயர்.

இப்படிப்பட்ட ஆழ்வாரை நமக்குப் பெற்றுத் தந்த திருக்குருகூருக்கு ஒப்பான ஒரு ஊர் உண்டோ? ஆதிநாதப் பெருமாளுக்கும் நம்மாழ்வாருக்கும் சமமான பெருமையைக் கொடுக்கும் ஊர். நம்மாழ்வார் அருளாலே, எம்பெருமானார் காலத் துக்கு முன்பே அவரின் பவிஷ்ய தாசார்ய விக்ரஹம் அவதரித்த ஊர். எம்பெருமானாரின் புனரவதாரமான மணவாள மாமுனிகளின் திருவவதார தலம்.

இப்படி எம்பெருமான், ஆழ்வார் மற்றும் ஆசார்யர்களுக்குப் பெருமை சேர்க்கும் தலமாக இருப்பதால் முப்புரியூட்டினதாகக் (மூன்று மடங்கு ஏற்றம் பெற்றதாக) கொண்டாடப்படுகிறது.

இப்படிப் பெருமை பெற்ற நம்மாழ்வார், புகல் ஒன்றுமில்லா அடியேன் உன் அடிக் கீழ் புகுந் தேனே என்று திருமலையப்பனிடம் சரண் புகுகி றார். அவனுக்கே ஒழிவில் காலமெல்லாம் கைங்கரி யம் செய்ய வேண்டும் என்று பாரிக்கிறார். அவரின் ஆறாம் பத்து பத்தாம் திருவாய்மொழி உலகம் உண்ட பெருவாயா என்று திருமலையப்பனின் பெருமையைப் பேசுவது. அதில் ஒரு பாசுரத்தைக் காண்போம்.

எம்பெருமானின் பேறு தப்பாதென்று துணிந்து இருத்தல் ஜீவாத்மாவுக்கு இயல்புதான். ஆனாலும், அந்தப் பேற்றின் இனிமை நெஞ்சுக்கு விஷயமாகத் தரித்திருக்க முடியாதபடி பதறச் செய்கிறதே, அந்தப் பதற்றத்தையருளிச் செய்கிறார்.

*அடியேன் மேவி யம ர்கின்ற அமுதே!*
*இமையோர் அதிபதியே!*
*கொடியா அடுபுள் ளுடையானே! கோலக்*
*கனிவாய்ப் பெருமானே!*
*செடியார் வினைகள் தீர்மருந்தே! திருவேங்*
*கடத்தெம் பெருமானே,!நொடியார் பொழுதும்*
*உனபாதம் காண நோலா*
*தாற்றேனே.*

அற்புதமான பாசுரம். திருவாராதனத்தில் பெருமாளுக்கு அமுது செய்தருளப் பண்ணும்போது


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
**திருமலையானின் அக்ஷர தீபிகை**

# ஸப்தகிரி
மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள்.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- “ஸப்தகிரி” படியுங்கள். உங்கள் அன்பானவர் களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் ‘ஸப்தகிரி’ வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.

இப்பாசுரத்தை அநுஸந்திப்பது என்று பட்டர் நியமனம் செய்திருக்கிறார்.

இனி, பொருளைச் சற்று சிந்திப்போம். முதல் வரியாக, அடியேன் மேவி அமர்கின்ற அமுதே என்று பகவானை அழைக்கின்றார். தேவர்கள் எம்பெருமானை வைத்துக் கொண்டு பாற்கடலை கடைந்து அமுதம் பெற்றார்கள்.

ஆரா அமுதமாக பெருமாள் நிற்கும் பொழுது, அவனை விடுத்து, அவன் கடைந்து கொடுத்த உப்புச் சாற்றை உண்டார்கள். பகவானைத் தவிர மற்ற பொருள்களைப் பொருளாகக் கருதாத ஆழ்வார், தனக்கு அமுதமாக எம்பெருமான் இருப்பதை முதல் வரியில் அருளிச் செய்கிறார். எனவே தேவர்கள் அனுபவத்தை விட, நம்மாழ்வார் அனுபவம் ஒரு படி மேம்பட்டது. அசாதாரணமானது. அடுத்து, இமையோர் அதிபதியே, தேவாதி தேவனே! என்கிறார்.

திருநாட்டிலே நித்யசூரிகள் உன்னை எப்படி அநுபவிக்கிறார்களோ அப்படி இங்கு அடியேன்

## அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 06-06-2025 | வெள்ளி | --- | அங்குரார்ப்பணம் |
| 07-06-2025 | சனி | துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 08-06-2025 | ஞாயிறு | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 09-06-2025 | திங்கள் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 10-06-2025 | செவ்வாய் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 11-06-2025 | புதன் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 12-06-2025 | வியாழன் | ஹனுமத் வாகனம் | |
| | | மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 13-06-2025 | வெள்ளி | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 14-06-2025 | சனி | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 15-06-2025 | ஞாயிறு | அவப்ருதோத்ஸவம், | திருச்சி உத்ஸவம் |
| | | சக்கர ஸ்நானம் | துவஜாவரோஹணம் |

**திருவேங்கடமுடையான் ஆகாசராஜாவின் மகளான ஸ்ரீபத்மாவதி தேவியை நாராயண வனத்தில் திருமணம் செய்து கொண்டபிறகு, பத்மாவதி தேவியுடன் திருமலைக்குப் புறப்பட்டார். திருமலைக்கு வரும் வழியில் சித்தேஸ்வர ஸ்வாமி என்பவர் திருவேங்கடமுடையானை நினைத்து தவம் இருந்தார். அந்தத் தவத்திற்கு மனமிறங்கி ஸ்வாமியும் அபய திருக்கரங்களுடன் எழுந்தருளி தரிசனம் அளித்ததாகத் தல புராணம் கூறுகின்றது.**

**1988ஆம் ஆண்டு முதல் இந்த ஆலயத்தை தி.தி.தேவஸ்தானம் நிர்வகித்து வருகின்றது. இவ்வாலயத்திற்குச் செல்ல திருப்பதியிலிருந்து ஒரு மணி நேரத்திற்கு ஒரு பேருந்து வசதி உள்ளது.**





அநுபவிப்பவன் என்பது குறிப்பு. அடுத்து ***''அடு புள் கொடியா உடையானே''*** என்று கருடன் பெற்ற சம்பந்தத்தை இணைத்துப் பாடுகிறார். கருடக் கொடி ஏற்றினால் உற்சவம் நடக்கிறது என்ற பொருள். கருடனைக் கண்டால் பெருமாள் வேகமாகப் போகிறார் என்று பொருள் (ஓடும் புள்ளேறி–பாசுரம்).

பகவான் வேகமாக வந்து தன்னைக் காக்க வேண்டும் என்கின்ற தொனியில் கருடனை இணைத்துப் பாடுகின்றார். இதைப் பாடும் போதே எம்பெருமானுடைய பழுப்பு நிறமும் கனிந்த பதமான கோலமுடைய அழகான அதரங்களும் கண்முன்னே காட்சி தர, கோலக் கனிவாய் பெருமானே என்று பாடுகின்றார்.

மலையப்பனின் இதழ் அழகு, ஆழ்வாரை அப்படி அனுபவிக்கச் செய்கிறது. ***"கோலக் கனிவாய்ப் பெருமானே கொடியாவடு புள்ளுடை யானே''*** என்று சேர்ந்து அந்வயித்து, ஆச்ரிதரை (பக்தர்களை) இவ்வழகை அநுபவிப்பிக்கைக்கு கொடிகட்டிக் கொண்டிருக்கிறவனே! என்றருளிச் செய்வர் நம்பிள்ளை.

இப்படி எம்பெருமானை அனுபவிக்க வேண் டும் என்றால் பாபிகளால் முடியுமா? முடியாது. சரி, பாவம் தீர்ந்து தான் அவனை அனுபவிக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கும் அவனைத்தானே அடைய வேண்டி இருக்கிறது.

எனவே, ***''செடி ஆர் வினைகள் தீர் மருந்தே''*** என்கிறார்.பிறவி நோய்க்கும் அவனல் லவா மருந்து. செடிபோலே செழித்த பாபங்களைத் தீர்க்கும் மருந்தல்லவா அவன். நிலத்தில் விளையும் மருந்தைக் காட்டிலும் மலையில் விளையும் மருந்து உயர்ந்தது.

நோய்களைத் தீர்க்கும் மருந்து உலகில் இருந்தாலும் நோய்கட்கு மூலக் காரணமான வினைகளைத் தீர்க்கும் மருந்து அவன்தானே. மருத்துவனாயும் மருந்தாயுமுள்ளவன் ஸ்வாமி மலையப்பனே என்பதால் "செடி ஆர் வினைகள் தீர் மருந்தே" என்கிறார்.

இப்படிப்பட்ட பெருமானுடைய திருப்பாதம் பார்க்காமல் இருக்க முடியாது, உயிர் தரிக்க முடியாது, என்ற பொருளில் ***''உன பாதம் காண நோலாது நொடி ஆர் பொழுதும் ஆற்றேன்''*** என்று பாசுரத்தை நிறைவு செய்கின்றார்.

பகவானைப் பார்ப்பதற்கு பன்னெடுங்காலம் தவம் இருப்பவர்கள் ஐயோ இன்னும் தரிசனம் கிடைக்க வில்லையே என்று கவலைப்படுவார்கள்.

ஆனால், அப்படிப்பட்ட நோன்புகள் எதையும் நான் நோக்க வில்லை. என்னுடைய நோன்பு எல்லாம் உன்னை காணாமல் தரிக்க முடியாது என்கின்ற மனநிலைதான். அவர்கள் இவ்வளவு செய்தும் தாமதமாகிறதே என்று கவலைப்படுகிறார்கள்.

உன்னைப் பார்க்காமல் இருக்க முடியாதே, நோன்புக்கு இயலவில்லையே என்கிற தவிப்பு எனக்கு இருக்கிறது என்று ஆழ்வார் நுட்பமாக காட்டுகின்றார். மலையப்பனை ஒருதரம் பார்த்தால் இப்படிப்பட்ட மனநிலை தான் தோன்றும்.

## பாரம்பரியமான உடைகளை அணிவோம்! திருமலையின் புனிதத்தைக் காப்போம்!!

**இந்து சனாதன முறைப்படி எந்த தெய்வ நிகழ்ச்சிகளிலும் நாம் பாரம்பரியமான உடைகளை அணிதல் வேண்டும். குறிப்பாக ஆலயங்களுக்குச் செல்லும்போது நாம் நம் பண்பாட்டின்படி பாரம்பரியமான ஆடைகளையே உடுத்திச் செல்லுதல் வேண்டும். அவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களை நம் இந்து கலாசாரத்தின்படி பாரம்பரியமான ஆடைகளையே அணிந்து வர வலியுறுத்துகின்றது.**



**ஆண்கள் வேஷ்டி, மேல்துண்டு, சட்டை, குர்தா, பைஜாமா போன்ற வற்றை அணிதல் வேண்டும். பெண்கள் புடவை, இரவிக்கை, துப்பட்டாவுடன் கூடிய சுடிதார், சிறுமிகள் பாவாடை சட்டை போன்றவற்றையே அணிந்து வருதல் வேண்டும். முக்கி யமாக ஆர்ஜித சேவை, சிறப்பு நுழைவு தரிசனத் திற்கு வரும் பக்தர்கள் கட் டாயம் இம்முறையினைக் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் குடும்ப வழக்கப் படி நெற்றியில் திலகமும் அணிதல் வேண்டும்.**



# நந்தவன சிறப்பை உணர்த்தும் ஆழ்வார்கள்

– திரு.சதா ஹரிஹரன்,
கும்பகோணம், 94882 41383.

இயற்கை அன்னை கொஞ்சி விளையாடும் முல்லை நிலத்து இறையான திருமால் ஒரு சமயம் ஸ்ரீவைகுண்டத்தில் உலா வரும் நித்திய சூரிகளான பஞ்சாயுதப்படைகள், திருவனந்தன், பெரிய திருவடி, சேனை முதலிகள் மற்றும் கௌஸ்துப, வனமாலி, ஸ்ரீவத்சம் ஆகியோரை அழைத்தார். அவர்களிடம் நீங்கள் அனைவரும் பூவுலகில் ஆழ்வார்களாக அவதாரம் செய்து, வேதக்கருத்துக் களை இனிய பாசுரங்களாக எடுத்து இயம்புமாறு அருளாணையிட்டார்.

அதனைத் தொடர்ந்து நித்திய சூரிகள் பன்னிரண்டு ஆழ்வார்களாக இப்பூலோகத்தில் அவதாரம் செய்தார்கள். இறைவன் அருளாணைப் படி நாலாயிர திவ்யப் பிரபந்தங்களை அருளிச் செய்தார்கள் என்பது புராண வரலாறாகும்.

இப்பன்னிரண்டு ஆழ்வார்களில் தாயின் கர்ப்பத் தில் வாசம் செய்யாமல் திருமால் அருளாணைப்படி, மலர்ந்த மலர்களில் அவதாரம் செய்தவர்கள் முதலாழ்வார்கள் என்றழைக்கப்படும் மூவர் ஆவார்.

அதில் முதல் ஆழ்வாரான பொய்கையாழ்வார். காஞ்சிபுரம் திருவெஃகா தலத்தில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் பூத்திருந்த தாமரைப் பூவில் ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் திருமாலின் பாஞ்சசன்னியம் எனும் சங்கு அம்சமாகத் தோன்றியவர். இவர் அருளிய நூறு பாசுரங்கள் முதல் திருவந்தாதி என்று அழைக்கப் படுகிறது.

இரண்டாம் ஆழ்வாரான பூதத்தாழ்வார், மகாபலிபுரம் எனும் தலத்தில் பூத்துக் குலுங்கிய நீலோற்பவ மலரில், ஐப்பசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் திருமாலின் கௌமோதகி எனும் கதையின் அம்சமாகத் தோன்றியவர். இவர் அருளிய நூறு பாசுரங்கள் இரண்டாம் திருவந்தாதி என்று அழைக்கப்படுகிறது.

மூன்றாம் ஆழ்வாரான பேயாழ்வார் சென்னை மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் ஆலய கிணற்றில் பூத்த செவ்வல்லிப் பூவில் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் திருமாலின் நந்தகம் எனும் வாளின் அம்சமாகத் தோன்றியவர். இவர் அருளிய நூறு பாசுரங்கள் நாதமுனிகளால் வரிசை படுத்தப்பட்டு மூன்றாம் திருவந்தாதி என்று அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட மூவரை போல் திருமாலுக்கு பாமாலையுடன் – பூமாலைகளையும் சூட்டி மகிழ்ந்த மூவர்.

ஸ்ரீகண்ண பிரானின் தாய் யசோதையைப் போல் தாயுள்ளம் படைத்த பெரியாழ்வார்.


ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆனி மாதம் சுவாதி நன்நாளில் கருடாழ்வாரின் அம்சமாக அவதரித்தவர் விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வார். இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு வடபத்ர சாயிப் பெருமாளுக்கு நந்தவனத்தில் பூத்துக்குலுங்கும் மலர்களைத் தொடுத்து தரும் கைங்கர்யத்தை வாழ் நாள் திருத்தொண்டாகச் செய்து வந் தார். இவர் அருளிய பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழி என்று அழைக்கப்படுகிறது.

திருமால் திருவுள்ளப்படி பூமியில் தோன்றி பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக வளர்க்கப்பட்ட ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைந்திருந்த திருத்துழாய் நந்தவனத்தில் ஆடிமாதம் பூரம் நன்னாளில் பூமாதேவி அம்சமாக அவதரித்தவர். இவர் பூமாலை தொடுத்து எடுத்தவுடன் அதனை முத லில் தான் அணிந்து பார்த்து விட்டுதான் இறைவழிபாட்டிற்கு அனுப்பி வைப் பார். இதனால் இவர் சூடிக் கொடுத்த சுடர் மங்கை என்று அழைக்கப்பட்டார். ஸ்ரீகண்ணபிரானுக்கு பூமாலைச் சூட்டி மகிழ்ந்த ஆண்டாள் அருளிய பாமாலை – திருப்பாவை என்று அழைக்கப்படுகிறது.

கும்பகோணம் அருகிலுள்ள திருமண்டங்குடி எனும் ஊரில், அந்தணர் குலத்தில் மார்கழி மாதம் கேட்டை நன்னாளில் திருமாலின் வைஜயந்தி அம்சமாக தொண்டரடிப்பொடியாழ்வார் அவதாரம் செய்தார். இவர் சாஸ்திரங்கள் பல படித்து திருமாலின் அடியாராக வலம் வந்தார். திருவரங்கப்பெருமானுக்கு பாமாலையுடன் திருநந்தவனம் அமைத்து பூமாலையும் சூட்டி மகிழ்ந்த அடிப்பொடித் தொண்டர் ஆவார். இவர் அருளிய கிரந்தங்கள் திருமாலையும், திருப்பள்ளி எழுச்சியும் ஆகும்.

ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரப்படி திருமாலையும் அவன் திருமார்பில் உ(நி)றைந்துள்ள திருமகளையும், மலர் கொண்டு வழிபட ஐச்வர்யங்கள் நிறையும் என்பது ஐதீகம். ஆகவே நாமும் நம்மால் இயன்றவரை நந்தவனங்களை அமைத்து அவற்றை பாதுகாத்து இறைவனுக்குத் தொண்டாற்றுவோம். இச்செயலானது இறைத்தொண்டோடு நம் வருங்கால சந்ததியினருக்கும் நாம் வழங்கிடும் நற்கொடை ஆகும். இயற்கையைப் பாதுகாத்திடுவோம்! எம்பெருமானுக்கு தொண்டாற்றிடுவோம்!!

## நாராயணகிரியும்... சிலாதோரணமும்...



திருவேங்கடமுடையான் ஆகாய மார்கமாக திருமலையில் முதன் முதலில் தன் திருப்பாதங்கள் பதித்த இடம் நாராயணகிரியாகும். திருவேங்கடவனின் திருப்பாதங்களை காலை முதல் மாலை வரை நாம் சென்று தரிசிக்கலாம். இத்திருப்பாதம் திருமலை ஆலயத்திற்குப் பின்புறம் உள்ள மலையில் சுமார் 5 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

தனது இரண்டாவது திருவடியைத் திருமலையில் சிலாதோரணம் என்றழைக்கப்படும் அரிய புவியியல் வளைவில் வைத்ததால் இது திருவேங்கடமுடையானால் தோற்று விக்கப்பட்ட வளைவாகவே பக்தர்கள் நம்புகிறார்கள். பின்னர், ஸ்வாமி இங்கிருந்து 1 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள திருமலை ஆலயத்தில் ஆனந்த நிலையத்தில் அர்ச்சாமூர்த்தியாக நின்று நமக்கு இன்றும் அருள் புரிந்து கொண்டிருப்பதாக புராணங்கள் கூறுகின்றன. இவ்வரிய நிகழ்ச்சிக்கு அடையாளமாக சுமார் 250 கோடி ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்பட்ட இப்புவியியல் வளைவு இன்றும் நமக்கு பொக்கிஷமாக விளங்குகிறது என பக்தர்கள் நம்புகிறார்கள்.



# पाठ : षट्त्रिंशः ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-36

| (धा) | (व-प्र.ए) | (अर्थः) |
|---|---|---|
| पठ् | पठति | படிக்கின்றான் |
| लिख् | लिखति | எழுதுகின்றான் |
| मार् | मारयति | கொல்லுகின்றான் |
| तोष् | तोषयति | மகிழ்ச்சி பெறச் செய்கின்றான். இன்புறச் செய்கின்றான். |
| रक्ष् | रक्षति | காக்கின்றான் |
| त्रास् | त्रासयति | பயப்படுத்துகின்றான் |
| पोषृ | पोषयति | ஆதரிக்கின்றான் |
| हास् | हासयति | சிரிக்க வைக்கின்றான் |
| शिक्ष | शिक्षयति | கற்பிக்கின்றான் |
| धाव् | धावति | ஓடுகின்றான் |
| क्षाळ् | क्षाळयति | கழுவுகின்றான் |
| ताड् | ताडयति | அடிக்கின்றான் |
| नाद् | नादयति | சத்தம் செய்கின்றான் |
| तोल् | तोलयति | தூக்குகின்றான் |
| पञ्च् | वञ्चयते | மோசம் செய்கின்றான் |
| पात् | पातयति | கீழே போடுகின்றான் |
| धार् | धारयति | கடனாளி ஆகின்றான் |
| चोर् | चोरयति | திருடுகின்றான் |
| भूष् | भूषयति | புகழ்கின்றான் |
| मुण्ड् | मुण्डयति | கடிக்கின்றான் |
| द्राव् | द्रावयति | உருக்குகின்றான் |
| पाय् | पाययति | குடிக்க வைக்கின்றான் |
| शाय् | शाययति | படுக்கவைக்கின்றான் |
| पाच् | पाचयति | பரிமாறுகின்றான் |
| पाठ् | पाठयति | படிக்க வைக்கின்றான் |
| लेख् | लेखयति | எழுத வைக்கின்றான் |
| शोष् | शोषयति | காய வைக்கின்றான் |
| दूष् | दूषयति | திட்டுகின்றான் |
| पूर् | पूरयति | நிரப்புகின்றான் |
| पीड् | पीडयति | இடையூறு செய்கின்றான் அமுக்குகின்றான் அழுத்துகின்றான் |
| दण्ड् | दण्डयति | தண்டிக்கின்றான் |
| मण्ड् | मण्डयति | ஒப்பனை செய்கின்றான் |
| गम् | गमयति | அனுப்புகின்றான் கடக்கின்றான் |
| चोद् | चोदयति | ஓட்டுகின்றான் தூண்டுகின்றான் |
| पाल् | पालयति | வளர்க்கின்றான் |
| चार् | चारयति | நடத்துகின்றான் |

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

க$_3$தப$_4$யே யேயே பதே$_3$ தவ
ருசி யுதா பு$_4$விவ்ருஷகி$_3$ரீச்வரா
வித$_3$த$_4$தே தேதே பதார்ச்சந
மிதரதா$_2$க$_3$தி விரஹிதா இதி
மதிமதா தாதாயிதே த்வயிசுரண
தாம் ஹ்ருதி கலயதாபரி
சரணயா யாயா ऽऽயதாதவ
ப$_2$ணிக$_3$ணாதி$_4$ பகு$_3$ருவரேண து ।
விரசி தாம்தாம்தாம் வநாவலி
முபக$_3$தே த்வயி விஹரதி த்$_3$ரும
நஹநக$_3$ாம் க$_3$ாமிவ ச்ரிஸ் மர
சயத்தவ ஸகு$_3$ருரய்ய ச
தத$_3$நுதாந்தாம் ரமாம்
பரிஜநகி$_3$ராத்$_3$ருதம வயதோ நிஜ
சிபதைசாசாசாலிநிமபி
விதரதோ வர விதர சம் மம ॥

**பதவுரை**

வ்ருஷகிரீச்வர – வேங்கடமலைத் தலைவனே! யேயே – எந்தெந்த (ஸாது ஜநங்கள்), கதபயே – நீங்கின பயத்தை உடைய, தவ– உன்னுடைய, பதே – திருவடியில், ருசியுதா – பக்தியுடையவர்களோ, தேதே – அந்தந்த (ஸாது ஜநங்கள்), இதரதா கதிவிரஹிதா: – வேறு உபாயமற்றவராய், தே– உன்னுடைய, பதார்ச்சனம் – திருவடியில் அர்ச்சனையை, விதததே – செய்வார்கள், இதி – என்று, மதிமதா – விருப்பம் உடையவர்கள், தாதாயிதே – ரக்ஷகனாக நினைத்த, த்வயி (ஏவ) – உன்னுடைய, சரணதாம் – உபாயத்வத்தை, ஹ்ருதி – மனதில் (நெஞ்சில்), கலயதா – நினைப்பவர்களான, பணிகண அதிபகுருவரேண – அநந்தாழ்வாரை ஆசார்யத் தலைவராலே, தவ – உன்னுடைய, பரிசரணயா – கைங்கர்ய ரூபமாக, ஆயதா – நீண்டதான, யாயாவநாவலி: – எந்தெந்த வன ஸமூஹம் (நிருமாணிக்கப்பட்டதோ), விரசிதாம்தாம் தாம் – (அவ்வாறு) நிருமாணிக்கப்பட்ட அந்தந்த வன ஸமூஹத்தில், த்வயி உபகதே – நீ ஸஞ்சரிப்பவனாய் இல்லாமல், ஸ:குரு: – அந்த ஆசாரியன், தவச்ரியம் – உன்னுடைய லக்ஷ்மியை, காம்இவ – பசுவைப்போலே, த்ரும–செண்பகமரத்தில், நஹநக – கட்டுவிக்கப்பட்ட, அங்காம் – அங்கங்களையுடையவனாக, அரசயத் –செய்தேன் (பசுவைப் போலே மரத்தில் கட்டுவித்தேன்).

ததநு – பிறகு, தாம்தாம் – களைப்படைந்த, நிஜ – தன்னுடைய, சிசுதசாசாலிநீம் அபி – தன்னுடைய குழந்தையாக ஆக வேணுமென்று வேண்டியும், தாம் – அவளை, பரிஜநகிரா – பரிசாரகர்களின் வார்த்தையாலே, ரமாம் – லக்ஷ்மியாக, த்ருதம் – வேகமாக, அவயத: (அத ஏவ) – நிச்சயித்துக் கொண்டவரா யிருப்பதாலே, விதரத – (உனக்கு) கொடுத்ததாக அநந்தாழ்வாருக்கு, வர– மாப்பிள்ளையானவனே!, மம – எனக்கு, சம் – ஸுகத்தை, விதர – அளிப்பாய் (அநுக்ரஹிப்பாய்), உன்னுடைய ஸ்வ ரூப குண வைபவ ஐஸ்வர்ய சீலம் முதலான அநுபவத்தினால் உண்டாகும் ஸுகத்தை அனுக்ரஹிக்க வேணும் என்பது கருத்து.



# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

– டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி, 99855 99669.

மேல் சுலோக விவரத்தில் இப்போது சொல்லப்பட்ட இதிகாஸமே இங்கும் பின்பற்றப்படுகிறது. ஐந்தாவது வரியில் முதலிலுள்ள "விரசிதாம்" என்பதற்குப் பதிலாக "விரசிதா" என்ற பாடத்தை ஏற்றுக் கொள்ளலாமென்று ஸம்ஸ்க்ருத வியாக்கியாதா காட்டியுள்ளார். ஆனால், இப்படிப்பட்ட பாடத்தை ஏற்றுக் கொண்டால் கணமான மகணத்திலேயே எழுத்துக்கள் மூன்றும் ஒரே விதமாக இருக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஊறு விளையும் என்ற எண்ணத்தினாலே கவி "விரசி தாம்" என்று பிரயோகித்தார் என்று கொள்ளலாம்.

*மம தயா யாயா SSவியாமதி*
*ருந$_3$யதே மம ஸபதி$_3$தாம் ஹர*
*கருணயா யாயா சுபா$_4$ மம விதர*
*தாமயி வ்ருஷகிரீச்வர*
*ஸது$_3$த$_3$யா யா யா ஸம்ருச்ச$_2$ஸிந*
*த$_3$ரமயேரி விதல நாதி$_3$ஷு*
*மது$_3$த$_3$ யாயாயா ஸமீப்ஸஸி*
*நது கத$_3$ம் மமரிபுஜயாயா ச।*
*மயித$_3$ யாயாயாஸி கேநதுந பததாம் நது*
*நிக$_3$த$_3$ தந்மம*
*மம விபோ$_4$ போ$_4$போகி$_3$ நாயக*
*சய$_4$மே மத மரிஜயம்தி$_3$ஸ*
*பரம யாயாயா த$_3$யா தவ*
*நிரவதி$_4$ம் மயி ஜதா மயி*
*ஸுமஹிமா மா மாத$_4$வ தி*
*முபக$_2$த்தவ மம க்ருதேSநக॥*

**பதவுரை**

அயிவ்ருஷகிரீச்வர – வேங்கட மலை இறைவனே!, மமதயா – மமகாரத்தாலே, மம– எனக்கு, யாயா – எந்தெந்த, ஆவிலா – கபடமான, மதி – புத்தி, உதயதே – உதயமாகின்றதோ, தாம் – அந்த புத்தியை, ஸபதி – உடனே, ஹா – நீங்குவாய், யாயா – எந்தெந்த, சுபா – மங்களகர மான புத்தி உள்ளதோ, தாம் – அதனை, மம – எனக்கு, கருணயா – கருணையோடு, விதர – அருள்வாய் (அனுக்ரஹிப்பாய்), த்வம் – நீ, ஸதுதயாய – (நீ) நல்லவர்களின் உதயத்துக்காக (பிறவிக்காக), ஆயாஸம் – களைப்பை, ருச்சஸி – அடைகிறாய், தரம் அபி – கொஞ்சமானாலும், அரிவிதல நாதிஷு – சத்ருக்களின் அழிவு முதலிய காரியங்களில், ந – அடைவதில்லை, (இப்படி இருக்க), மதுதயாய– என்னுடைய உதயத்திற்காக (பிறப்புக்காக), கதம் – எப்படி, ந ஆயஸம் ஈப்ஸஸி – களைப்பை அடைந்தாய்? மமரிபுஜயாய – என்னுடைய சத்ருக்களை ஜயிப்பதற்காகவும், கதம் தம் – எப்படி அதை (களைப்பை வேண்டிக்கொண்டாய்?), மயி–என்னிடம் (என் விஷயத்தில்), தயாயா: – தயைக்கு, பததாம் – ஆதாரத்வத்தை, தேசு – எக்காரணத்தால், நயாஸி – ஏற்றுக்கொண்டாய், தத் – அதனை, மம – எனக்கு, நிகத – சொல்வாய், போயோகி நாயக சயந – ஓ! அநந்த சயனனே!, மம விபோ – என்னுடைய ஸ்வாமியே (தலைவனே!), மே மதம் – எனக்கு விருப்பமான, ரிபுஜயம் – சத்ரு ஜயத்தை, திச – தருவாய், பரம – மேன்மையான உத்தமனே, தவ – உனக்கு, யா – எந்த, தயா – தயை (கருணை), மயி – என்னிடம் உள்ளதோ, ஜடிதி – வேகமாக, நிரவதிம் – எல்லையற்றதான, தாம் – அந்த தயையை, யாயா: – அடைவாய், மாதவ – ஓ மாதவனே! அநக – பாபமற்றவனே! தவ – உன்னுடைய, ஸுமஹிமா – மிக்க பெருமை, மமக்ருதே – எனக்காக, க்ஷதிம் – தோஷத்தை (குறையை), மா உபமகத் – ஏற்பாயாக, என்னுடைய பாவங்களைப் பாராமல் (கணிசியாமல்) என் திறத்தில் நீ தயையைக் காண்பிக்காமல் போனால் அது உன் பெருமைக்கு இழுக்கு உண்டாகும் என்பது கருத்து.

*இன்னும் ஜ்வலிக்கும்...*

## 2025, ஜுலை மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 05 | பெரியாழ்வார் சாத்துமுறை |
| 06 | சாதுர் மாத விரதமாரம்பம் |
| 06–08 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் |
| 07 | நாதமுனிகள் திருநட்சத்திரம் |
| 06–09 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 10 | வியாச ஜெயந்தி, ஆஷாட பௌர்ணமி, குரு பௌர்ணமி |
| 16 | திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம் |
| 25 | ஸ்ரீசக்கரத்தாழ்வார் திருநட்சத்திரம் |
| 28 | நாகசதுர்த்தி,28 ஆண்டாள் திருவாடிப்பூரம், |
| 29 | கருட பஞ்சமி |
| 29–31 | வாயல்பாடு ஸ்ரீபட்டாபி ராம ஸ்வாமி பட்டாபிஷேகம் |

# சிந்தை மயக்கும் விந்தை கற் சிற்பங்கள்

# ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர்





மகேஸ்வர வடிவங்களின் தோற்றமானது ஈசான மூர்த்தி, தத்புருஷமூர்த்தி, அகோரமூர்த்தி, வாமதேவமூர்த்தி, சத்யோஜாதமூர்த்தி என ஐந்து சிரம் உடைய சதாசிவ வடிவில் இருந்து முதலில் தோன்றின எனவும், தொடர்ந்து மேற்கண்ட ஒவ்வொரு மூர்த்தியிடமிருந்து ஐந்து ஐந்தாக இருபத்தைந்து வடிவங்கள் உண்டாயின என்றும் சிவபுராணம் எடுத்துரைக்கின்றது.



இவ்வடிவங்களில் இருபத்தைந்தாவது வடிவான ஆணும், பெண்ணும் இணைந்த மாதொருபாகன், மங்கை பங்கன், உமைபங்கன் என்றழைக்கப்படும் அர்த்தநாரீஸ்வரர் வடிவானது இந்தியா அளவில் பல சிவாலயங்களில் நின்ற, அமர்ந்த திருக்கோலத்தில் உள்ளதும், அதில் குறிப்பாக தமிழகத்தில் திருச்செங்கோடு, வாசுதேவநல்லூர், ரிஷிவந்தியம் ஆகிய தலங்களில் உள்ள திருக்கோயில்களில் மூலமூர்த்தியாகவும், திருவண்ணாமலையில் திருவீதி உலா வரும் மூர்த்தியாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



அதிலும் தமிழகத்தில் உள்ள ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் பல சிவாலய கோட்டங்களில் அர்த்தநாரீஸ்வரர் நின்ற கோலத்திலும், மிக அரிதான வகையில் தாராசுரம் ஐராதீஸ்வரர் ஆலயத்தில் மூன்று சிரசுடன், அஷ்டபுஜத்துடன் அர்த்தநாரி சூரியன் வடிவிலும் மற்றும் சில ஆலயங்களில் அமர்ந்த கோலத்திலும் எழுந்தருளியுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

### அர்த்தநாரீஸ்வரர் வரலாற்றுச் சிறப்பு



ஈசனை மட்டும் வழிபடும் வழக்கம் உடைய பிருங்கி முனிவர் என்பவர் சிவனிடம் மிகுந்த பக்தி பூண்டவர் ஆவார். இவர் கயிலாயம் வரும் வேளைகளில் அன்னை உமாதேவியுடன் அமர்ந்துள்ள சிவபெருமானை மட்டும் வணங்கி அன்னையை வழிபடாமல் சென்று விடுவார். இதனை கண்ட அன்னை மகாசக்தி தனது சக்தியை பிருங்கி முனிவர் உணர உடலில் இருந்து விலகினாள். இதனால் பிருங்கி முனிவர் தன் சக்தி எனும் பலத்தை இழந்தார். அவரால் எழுந்து நிற்க கூட முடியாமல் தளர்ந்தார். பிருங்கி முனிவரின் இந்நிலையினைக் கண்ட சிவபிரான் மனமிரங்கி, அவருக்கு ஊன்றி நடக்க மூன்றாவது கால் ஒன்றை வழங்கினார். இதனால் இவருக்கு மூன்று கால் மகரிஷி என்று ஒரு பெயரும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.



பிருங்கி முனிவர் தமது வழிபாடு சிறிதும் மாறாது மீண்டும் பார்வதி தேவியை வணங்காமல் சிவனை மட்டும் வழிபட்டு வந்தார். இதனால் மேலும் சினங்கொண்ட பார்வதி தேவி கௌதம மகரிஷி வழிகாட்டின்படி வடநாட்டின் கேதாரம் எனும் தலத்திலுள்ள கங்கைக் கரையில் எழுந்தருளி ஈசனை நோக்கி தவம் புரிந்து, புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமி தொடங்கி, தேய்பிறை



சதுர்த்தசி வரையிலான இருபத்தொரு நாட்கள் கேதார கெளரி விரதத்தை மேற்கொண்டு பரமனின் இடப்பாகம் பெற்றார். அவ்வரத்தின்படி சிவனும் பார்வதி தேவியும் இணைந்த அர்த்தநாரீஸ்வரர் ஆனார். இதனைக் கண்ட பிருங்கி மகரிஷி மனம் தளராது சிவனை மட்டும் வழிபட ஒரு வண்டுருவம் எடுத்து, சிவன் பார்வதி இணைந்த உடலினைத் துளைத்து வலம் வந்து, சிவனை மட்டும் வணங்கிச் சென்றார். இதனைக் கண்ட சிவபிரான் பிருங்கி முனிவரைப் பார்த்து நானும் சக்தியும் ஒன்றுதான். “சக்தியில்லையேல் சிவமில்லை” எனக்கூற, அதனைத் தொடர்ந்து பிருங்கி மகரிஷி சித்தம் தெளிந்து சிவசக்தி இரண்டல்ல ஒன்றுதான் என்பதை உணர்ந்து அம்மையப்பனாக அருளும் வடிவான அர்த்த நாரீஸ்வரரை வணங்கி மகிழ்ந்தார் என்று புராணங்கள் எடுத்துரைக்கின்றது. (திருச்செங்கோடு தல வரலாறும் இச்செய்தியை எடுத்து இயம்புகிறது).

**தஞ்சை மாவட்டத்தில் அமர்ந்த கோல அர்த்த நாரீஸ்வரர் சிற்பங்களின் சிறப்பு :**

இவ்வரலாற்று சிறப்புமிக்க அர்த்தநாரீஸ்வரர் வடிவம் அரிதான வகையில் (உத்கடுகாசனத்தில்) அமர்ந்த கோலத்துடன் தஞ்சாவூர் கலைக்கூடத்தில் ஒன்றும் மற்றொன்று தஞ்சை மாவட்டம் திருவையாறு அருகிலுள்ள திருக்கண்டியூர் வீரட்டம் அருள்மிகு ஸ்ரீபிரம்ம சிரகண்டீஸ்வரர் ஆலயத்தில் சிலை வடிவுடன் உள்ளது. இவரை அர்த்தநாரி தட்சிணாமூர்த்தி எனக் கூறுபவர்களும் உண்டு. மயிலாடுதுறை மாவட்டம் நல்லாடை எனும் ஊரிலுள்ள அருள்மிகு ஸ்ரீஅக்னீஸ்வரர் கோயிலில் அமர்ந்த கோலத்தில் அர்த்தநாரீஸ்வரர் எழுந்தருளி உள்ளார்.

மேலும், பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒரு முறை மகாமக தீர்த்தவாரி விழாக்காணும் கும்பகோணம் மகாமகக்குளம் சோடச (16) மகாலிங்கஸ்வாமி ஆலய சன்னதி தூணில் சர்வ அலங்காரத்துடன் திருத்தேரில் அமர்ந்த கோலத்திலும், ஆதிகும் பேஸ்வரர் ஆலயத்தில் அஷ்டபுஜத்துடன் அமர்ந்த கோலத்தில் தூண் சிற்பமாகவும் மற்றும் குடந்தை அபிமுகேஸ்வரர் ஆலய தூணில் ரிஷபத்தின் மீது அமர்ந்த கோலத்தில் நித்தம் பிரதோஷம் காணும் வண்ணம் அர்த்தநாரீஸ்வரர் புடைப்பு சிற்பம் உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்காணும் மூன்று பாதங்கள் உடைய பிருங்கி மகரிஷியின் சிற்ப வடிவம் கோவை – பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்திலுள்ளது. இதுபோல் சிற்பங்களை தமிழகத்திலுள்ள சில ஆலயங்களிலும் காணலாம்.

***–படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை, 9443171383***



## ஊண்மிக விரும்பு

புதிய ஆத்திசூடி 6

“ஊன் உடலை வருத்தாதீர் உணவு இயற்கை கொடுக்கும்”
“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்”

**இப்படி உணவு குறித்துப் பலவிதமாக பாரதியார் கூறியிருக்கிறார். முந்தைய ஆத்திசூடியான ‘உடலினை உறுதி செய்’ என்று கூறுவதன் மூலம், உடல் உறுதியாக இருக்க வேண்டுமென்றால் ஊணை (உணவை) விரும்பி சாப்பிட வேண்டும் என்கிறார். உணவில் அசட்டையாக இருந்து வரும் சமுதாயத்தைக் கண்டு “ஆரோக்கியம் தரும் உணவினை சாப்பிடுங்கள், துரித உணவினைத் தவிர்த்து சிறுதானிய வகைகளையும், காய்கறி, கீரை வகைகளையும் விரும்பி சிறுவயதிலிருந்தே சாப்பிட வேண்டும்” என்கிறார். அதற்காக எப்போதும் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது பொருளில்லை. உடல் உறுதியாகும் அளவிற்கு சத்து மிகுந்த உணவு சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ குழந்தை பழக்கத்திலிருந்தே உணவுப் பழக்கங்களை சீராக்கிக்கொள்ள வேண்டும் என்கிறார் பாரதியார்.**

**டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை,**
**மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938**



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

சீதைக்கான மணாளன் கிடைப்பானா? என ஜனகர் கூறியதைக் கேட்ட சதானந்தர் "அரசே! பூதேவியின் தோற்றம் சீதை. அந்த தாய்க்கு தகுதியான சிறந்த மணாளன் இருக்கிறான். அதுமட்டுமல்ல, நான்கு பெண்க ளுக்கும் தகுதியுடைய மணவாளர்கள் உள்ள குடும்பம் கூட உள்ளது. உன்னுடைய கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற வேண்டுமானால், வேங்கடாசல மகிமைகளைக் கேட்பதும் படிப்பதுமான செயல்களை நீ செய்வாயாக. உன் கோரிக்கைகள் நிச்சயம் நிறைவேறும். வேங்கடகிரி மகிமைகளைக் கேட்டதாலேயே பிரம்மா முதலானவர்களும் உயர்ந்த நிலையை அடைந்தனர்.

வேங்கடாத்ரி மகிமையை இவ்வளவுதான் எனச் சொல்ல முடியாது. இம்மலையின் பெருமையைக் கேட்ட வரின் பாவங்கள், வறுமை, தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்துபோவது என்பது உறுதி.

மேலும், அவரவருடைய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். எல்லா சுகபோகங்களும் உண்டாகும். மகாராஜா இம்மலை மிகவும் பழமை ஆனது. 'க்ருத'யுகத்தில் இந்த மலைக்கு 'வ்ருஷபாத்ரி' என்று பெயர். த்ரேதாயுகத்தில் 'அஞ்சனாத்ரி' என்றும், துவாபர யுகத்தில் 'சேஷபர்வதம்' என்றும், கலியுகத்தில் 'வேங்கட கிரி' என்றும் சிறப்புப் பெற்று விளங்குகிறது என்றார். இதைக் கேட்டு ஜனக மகாராஜா "முனிவரே ஒரு மலைக்கு இத்தனை பெயர்களா! இப்பெயர்கள் எப்படி இம் மலைக்கு உண்டானது என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளேன் என்றார். அப்பொழுது அவர் அதற்கு விளக்கம் அளிக்கும் விதமாகக் கூறத் தொடங்கினார்.

ஒரு காலத்தில் அம்மலையில் 'வ்ருஷபாசுரன்' என்ற அசுரன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு முனிவர்கள் என் றாலே பிடிக்காது. எனவே எவ்வேளையும் அவர்களைத் துன்புறுத்திக் கொண்டே இருந்தான். அந்த அசுரனின் தொல்லைத் தாங்க முடியாமல் முனிவர்கள் எல்லோரும் தங்களுடைய வருத்தத்தை வராஹ ஸ்வாமியிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஸ்வாமி சன்னிதிக்குச் சென்ற அவர்கள் "பரமாத்மா ! இந்த மலையில் வ்ருஷபாசுரன் என்னும் அசுரன் ஒருவன் இருக்கின்றான். அவனுக்கு நாங்கள் எந்தவொரு தீங்கையும் விளைவிக்காவிடினும், எந்தவொரு காரணம் இன்றி எங்களைத் துன்புறுத்தி வருகிறான். எனவே, எங்கள் மீது கருணைக் கொண்டு அந்த அசுரனை அழித்து அவனிடமிருந்து எங்களை தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என வேண்டிக் கொண்டனர்.

முனிவர்களின் வருத்தத்தைப் புரிந்துகொண்ட வராஹ ஸ்வாமி "முனிவர்களே! உங்கள் வருத்தத்திற்கான காரணத்தை அறிந்து கொண்டேன். அசுர சம்ஹாரம் கட்டாயம் நடந்தே தீரும். நீங்கள் அஞ்சாமல் செல்லுங்கள் என்று ஆறுதல் கூறினார். அவன் 'கரான ந்ருஸிம்ஹ' மந்திர உபாசகன். அந்த சுவாமி மந்திர உபாசனம் செய்து, தினமும் தும்புரு தீர்த்தம் உள்ள சுற்றுப்புறப் பகுதிகளில்

அமர்ந்து தியானம் செய்பவன். பூஜை முடிவில் தன் தலையைத் தானே வெட்டிக் கொண்டு நரஹரிக்கு அர்ப்பணிப்பான். இவ்வாழமான பூஜையைச் செய்வது ஐந்நூறு ஆண்டுகள் கழிந்தது. அவனுடைய அசுர பக்திக்கு மகிழ்ந்த சுவாமி வ்ருஷபாசுரன் முன்பு தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் தருகிறேன் எனக் கூறி நின்றார்.

"ஸ்வாமி! சொர்க்கவாசம் எனக்கு வேண்டாம். பிரம்ம லோகமும் எனக்கு வேண்டாம். கடைசி காலத்தில் அனைவரும் கேட்கும் மோட்சமும் எனக்கு வேண்டாம். என்னை தாங்கள் தவறாக எண்ணாதீர். வெவ்வேறு அவதாரங்கள் எடுத்து, எத்தனையோ அசுரர்களை அழித்தீர். அவ்வவதார சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கொண்டு என் முன் வந்து நின்றால், அப்பொழுது உம்மோடு போர் புரிய வேண்டும் என்பதே என் சிறிய கோரிக்கை" என வேண்டிக் கொண்டான். அசுரனின் வேண்டுக்கோளைக் கேட்டு, புன்னகைத்தப்படி அனைத்து அவதார வடிவங்களையும் தாங்கியவராகத் தோன்றினார்.

ஒரு சமயம் இவர்களிடையே கடுமையான போர் நடைபெற்றது . அணையப் போகும் விளக்கு மிகப் பிரகாசமாக எரிவதுபோல, நரஹரியை விட அசுரனின் கை மேலோங்கியதைக் கண்டு தேவர்கள் கவலை அடைந்தனர். நரஹரி வெற்றிப் பெறுவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஸ்வாமி உடனே கருடவாகனதாரியானார். ஆயிரம் கைகளைக் கொண்டு, ஆயிரம் ஆயுதங்களோடு அசுரனைத் தாக்கத் தொடங்கினார். மாயாவியான அசுரனும் செயற்கையான முறையில் கருட வாகனத்தின் மீது ஏறி கடுமையாகப் போர் புரிந்தான். ஸ்வாமியோ அசுரனின் மாயா சக்தியை அடக்கினார். அப்பொழுது வ்ருஷபாசுரன் சாதாரண வடிவத்தில் நிற்க வேண்டியதாயிற்று.

"அசுரனே! எனக்கு நிகராக, என் முன் நின்று போராட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாய். வரம் கூட கேட்டுப் பெற்றாய். ஆனால் நீ எவ்வளவு? உன் சக்தி எவ்வளவு? நீ என்னை பக்தியோடு நினைத்து வழிபட்ட காரணத்தால் உன்னை அழிக்காமல் இத்தனை காலம் விட்டு வைத்தேன். நீ செய்த தவறுகள் அனைத்தையும் மன்னித்தேன். இருந்தாலும், இன்று நீ மாயாவிஷ்ணு வடிவத்தோடு என்னுடன் போர் புரிந்தாய். நீ எங்குச் சென்று மறைந்து கொண்டாலும் உன்னை நான் விட மாட்டேன். அசுரனே! என் கையில் உள்ள சக்கர ஆயுதத்தால் உன்னை அழிக்காமல் போனால், நான் நரசிம்மனே அல்ல" என்று சுவாமி சக்கர ஆயுதத்தைத் தன் திருக்கரத்தில் ஏந்திக் கொண்டார். எம்பெருமான் சக்கரதாரியாக ஆனதைக் கண்டவுடன் வ்ருஷப அசுரன் இனி இவருடன் போரிட்டு பயன் இல்லை என்று உணர்ந்து உண்மையான பக்தியோடு ஸ்வாமியின் திருப்பாதங்களில் வீழ்ந்தான்.

"தேவா! உன் திருக்கரத்தில் உள்ள சக்கர ஆயுதத்தின் சக்தியையும் பெருமையையும் பிரம்ம தேவராலும் விவரிக்க முடியாது. அம்பரீஷன் முதலானவர்க்கு உற்றத் துணையாக நின்றவர். சக்கராயுதத்தினால் கொல்லப்பட்ட அனைவருக்கும் மறுபிறப்பு இல்லை என்பதை நான் அறிவேன். அதனால் தாங்கள் உம் சக்கராயுதத்தால் என் உடலை இரு கூறாக்குவதே உத்தமம். இருந்தாலும் ஸ்வாமி! நான் உம்மிடம் வேண்டிக் கொள்ளவது ஒன்றே ஒன்று" என்றான் அசுரன்.


தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

## திருமலை மலைப்பாதையில்..

- வாழ்க்கை விலைமதிக்க முடியாதது. எனவே சாலை விதிமுறைகளைக் கடைபிடியுங்கள்.
- வாகனத்தை கவனமுடன் நடத்துங்கள். சேரவேண்டிய இடத்தை எளிதில் அடையுங்கள்.
- மலைப்பாதையில் திருப்பதியில் இருந்து திருமலைக்குப் பயண நேரம் 28 நிமிடங்கள்.
- மலைப்பாதையில் திருமலையில் இருந்து திருப்பதிக்குப் பயண நேரம் 40 நிமிடங்கள்.
- மலைப்பாதையில் உங்களுக்கு முன்பாகச் செல்லும் வாகனத்தை முந்தாதீர்கள்.
- மலைப்பாதையில் வாகனத்தின் இன்ஜினை நிறுத்தி நியுட்ரலில் செல்லாதீர்கள்.
- மலைப்பாதையில் கைபேசியில் உரையாடிக் கொண்டே வாகனத்தை ஓட்டாதீர்கள்.

# குறுக்கெழுத்துப் புதிர் -107




**தொகுப்பு : திரு.எஸ்.ராஜகுமார்,சென்னை.**

புதிருக்கு விடை அறிய 24ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

1. இரண்டு கைகளையும் கட்டியபடி கருடன் தரிசனம் தரும் தலம்...(9)
4. கிருஷ்ணர் அவதரித்த சிறைச் சாலை உள்ள இடம்...(3)
5. லட்சுமணமுனி என அழைக்கப் படுபவர்....(5)
7. பலிபீடத்தைப் பொதுவாக ...(7) என்று அழைப்பர்.
12. ருத்ர அம்சம் கொண்ட ஆஞ்ச நேயர் உள்ள தலம்...(8)
16. ஏழுமலையானை மணந்த திருமகள் ...(6) திருத்தலத்தில் கொலுவீற்றிருக்கிறாள்.

## வலமிருந்து இடம்

03. மாங்கல்யம் வேண்டி அம்மனை வழிபடும் விரதம்...(9)
06. படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே என்றவர்...(8)
08. பிரம்மாவுக்கு வேதம் கிடைத்த நன்னாள்...(8)
09. திருமால் பள்ளி கொண்டிருக்கும் கோலத்தினை ...(6) என்பர்.
10. குலசேகராழ்வார் ...(8) அருளியது.
13. திருநாராயணபுரத்தில் இராமானுஜர் கைங்கர்யங்கள் ஏற்பாடு செய்ததை ...(7) என்று கொண்டாடுகிறார்கள்.
15. வைணவ ஆசாரியர்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட க்ஷேத்திரங்கள்...(10) எனப்படும்.
17. பரசுராமர் ஆமையின் மீதுள்ள 5 தலை நாகத்தின் மீது காட்சித் தரும் தலம்....(6)

## மேலிருந்து கீழ்

01. மகாபலி நிறுவி வழிபட்ட சிவபெருமான் கோயில்...(7)
02. கேரளாவில் ......(8) கோயில் கருடனுக்கு உள்ளது.
04. நித்ய கல்யாணப் பெருமாளின் மற்றொரு பெயர்....(9)
11. பகிரதனால் உருவான நதி....(4)


## கீழிருந்து மேல்

14. வைணவத் தலங்களில் ராகு கிரகத்திற்குரிய தலம்...(6)

## திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 06-07-2025 | ஞாயிறு | ---- | அங்குரார்ப்பணம் |
| 07-07-2025 | திங்கள் | பஞ்சமூர்த்திகளுக்கு ஸ்நபன திருமஞ்சனம் | பவித்ர மண்டல பூஜை, ஹோமம் |
| 08-07-2025 | செவ்வாய் | க்ரந்தி பவித்ர சமர்ப்பணம் | மாலை பவித்ர பிரதிஷ்டை |
| 09-07-2025 | புதன் | பட்டு பவித்ர சமர்ப்பணம் பவித்ரோத்ஸவம் நிறைவு | பஞ்சமூர்த்திகள் வீதி உத்ஸவம். |






# சோளிங்கர், சோளசிம்மபுரம், கடிகாசலம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

ஸ்ரீந்ருஸிம்ஹ அவதாரத்தை அவதார காலத்திற்குப் பின்னால், காணவிரும்பிய ஸப்த ரிஷிகள் தவம் செய்தபோது, தாமதிக்காமல் ஒரே நாழிகைக்குள், அவர்களுக்கு இப்பெருமாள் காட்சி அளித்ததால், இத்திவ்யதேசத்திற்கு திருக் கடிகை என்ற திருப்பெயர் வந்தது.

முன்பு ஒரு முறை, வசிஷ்டரின் பிரம்ம வலிமையின் முன், விசுவாமித்திரரின் க்ஷத்ரிய வலிமை தோற்றபோது, சூரியன் விசுவாமித்திரரை நோக்கி, "நீ இத்திவ்ய தேசத்தில், ஒரு கடிகை (நாழிகை) சிங்கப்பிரானை நினைத்துத் தவம் இருந்தால், அவரது அருளால் ப்ரஹ்ம ரிஷியாக ஆகலாம்" என்று சொன்னாராம்.

காச்யப ரிஷிக்கு, அதிதி, திதி என்று இரு மனைவியர். அதிதியின் வயிற்றில் பிறந்த மக்கள் தேவர்கள் ஆயினர். அடையக் கூடாத காம உணர்வைத் திதி அடைந்து, காச்யபர் எவ்வளவு எடுத்துக்கூறியும் கேளாது, காமத்தின் வயப்பட்டு, பொருந்தாத அந்திப்பொழுதில், காச்யபரை வற்புறுத்தியதால், இரண்யாட்சன், இரண்யகசிபு என்ற இரு கொடியவரை மைந்தர்களாகப் பெற்றெடுத்தாள். மூத்தவன் இரணியகசிபு. இளை யவன்இரண்யாட்சன். பகவான் வராக அவதாரம் எடுத்து, இரணியாட்சனைக் கொல்லவும், தம்பியின் மரணத்தால்,பழிவாங்கத்துடித்த இரணியகசிபு, தன் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டி, கொடிய தவம் செய்தான்.

இந்நிலையில் இரணியன் மனைவியான கயாது நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தபோது, இந்திரனால் கவரப்பெற்று, பின்பு நாரதரால் தடுக்கப் பெற்று, அவரது தவச்சாலையில் வாழ்ந்து வர, தவத்தால் உடலாற்றல் குறைந்த இரணிய னுக்கு முன்னால், பிரமன் தோன்றி, தனது கமண்டலத்தில் இருந்து புனித நீரைத் தெளிக்க வும், பொன் போன்ற நிறத்தில் புதிய வலிமை கொண்டு புறப்படுகிறான் இரணியன், வேதங்களை யும், அவற்றின் பொருள்களையும் வரபலத்தால் பெற்று, யாராலும் எதனாலும், மரணம் இலாத நிலையை வரமாக வேண்டிப் பெற்றான். நாரதரின் தவச்சாலையில் வாழ்ந்த, இரணியனின் மனைவி, இயன்ற பணிகளை முனிவர்க்குச் செய்து, உரிய காலத்தில், பிரகலாதன் என்ற நன்மகனைப் பெறுகிறாள்.

பிரகலாதனுக்கு ஐந்து ஆண்டுகள் நிறைந்த தும், இரணியன் இரு அசுர குருக்களான சண்டன், அமர்க்கன் என்பவர்களிடம் அச்சிறுவனுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கிய பின், பிரகலாதனின் கல்வி அறிவை உணர்ந்தான். நாரதர் வாயிலாக, கற்க வேண்டிய அனைத்தையும் கற்று, கருவிலே

## ஒரே க்ளிக்கில் தரிசனம் டிக்கெட்




தி.தி.தேவஸ்தானத்தின் TTDEVASTHANAMS என்கிற டிஜிட்டல் வடிவிலான மொபைல் செயலியின் வாயிலாக பக்தர்கள் திருமலையில் ஸ்ரீவாரி தரிசனம், சேவைகள், அங்கபிரதக்ஷிணம், ஸ்ரீவாரி சேவை, தங்குமிடம் போன்றவற்றை முன்பதிவு செய்யலாம். நன்கொடைகளும் செலுத்திடலாம். மேலும் தி.தி.தே. தகவல்கள், புத்தகங்கள், உற்பத்தி பொருட்கள், தேவஸ்தானத்திற்குட்பட்ட இதர ஆலயங்கள் குறித்தும் பக்தர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

புஷ் நோட்டிபிகேஷன் மூலம் திருமலை ஆலயத்தில் நடைபெறும் உற்சவ விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். மேலும், எஸ்.வி.பி.சி. சேனல் வாயிலாக நேரடி ஒளிபரப்புகளையும் காண இயலும். கணினி பயன்படுத்தத் தெரியாதவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மொபைல் செயலியால் கையடக்க கைபேசியின் வழியாக திருவேங்கடமுடையானை கண நேரத்தில் காணும் பாக்கியத்தைப் பெறலாம்.

**கைபேசி செயலியைப் பயன்படுத்தி கோவிந்தனை தரிசிப்போம்!**

திருவுடைய பிரகலாதன், இரணியனின் ஆணையின் வண்ணம் ஆசிரியர்கள் அளித்த உலகியர் கல்வியை ஏற்க வில்லை.

நாராயணனாக பகவானைத் தவிர, அழியும் இரணியன் பகவான் என்பதை மறுத்தான் பிரகலாதன். “எங்கும் உளன் எம்பெருமான்” என்ற உண்மையைத் தந்தையிடம் எடுத்துக்காட்டினான்.

தன் பகைவனான நாராயணனை வழிபடும் பிரகலாதனைக் கண்டு பொங்கிய இரணியன் அளித்த எத்தனையோ தண்டனைகளும், சிறுவனைச் சிறிதும் மாற்றவில்லை.

இரணியன் தான் நேரில் அளந்து இட்ட வெற்றித் தூணைக்காட்டி வினவியபோது, அங்கும் எம்பெருமான் விளங்குவதாகச் சிறுவன் உறுதியாகக் கூறுகிறான். பிள்ளையைச் சீறி வெகுண்டு, இரணியன் தூணைப் புடைக்கவும், திசை திறந்து அண்டங்கீறி, செங்கட் சிங்கமாய், எம்பெருமான் சிரித்து, தூணைத் தாயாகக் கொண்டு எம்பெருமான் நரசிங்கமாய்த் தோன்றி, இரணியன் பெற்ற வரங்களுக்கு மதிப்பு அளித்து வரங்களுள் அகப்படாத அவதாரம் எடுத்து, இரணியனை வீழ்த்தி, பிரமன் முதலான தேவர்களாலும் அருளே உருவான திருமகளாலும் நீக்க முடியாத நரசிங்கச் சீற்றம், பிரகலாதனின் பக்தி உணர்விற்கு முன்னால், அருளாக மாற்றம் கொண்டது. நரசிம்மனே திருக்கடிகை மலையில் அமிர்தவல்லித் தாயாருடன் யோக நரசிம்மர் வடிவில் அர்ச்சையில் விளங்குகிறார்.

மஹாலக்ஷ்மி அர்ச்சை நிலையில் அன்பர்களுக்கு அருள வேண்டும் என்ற பெருவிருப்பால் பகவானைப் பிரிந்து, இங்கு மலை உச்சியில் அமைந்த புனிதத் திருக்குளத்தில், ஆயிரம் இதழ்கள் பொருந்திய தாமரை மலரில், அமிர்த வல்லித் தாயாராக அவதரித்து இங்கு மலர்கள் நிறைந்த திருக்குளத்தில், தோழியரோடு விளையாடி மகிழும் திருமகளை பகவான் திருமணம் செய்து கொண்டார். வெள்ளிக் கிழமையில், லக்ஷ்மி தீர்த்தக்கரையில் இருவருக்கும் திருமணம் நிகழ்ந்ததால், கிழமையும் தீர்த்தமும், இங்கு மிகவும் புகழ் வாய்ந்தது.

இந்திரத்துய்மன் அரசன் ஒருமுறை மான் வேட்டையின் போது, கருணை உணர்வால், வேட்டையில் வெறுப்புற்று, சிறிது சிறிதாக நாட்டு ஆட்சியிலும் பற்றின்றி, மைந்தனிடம் பொறுப்பைக் கொடுத்து, ஹரித்துவார் செல்ல, ஒரு நாள் ஹரி

என்று கூறுவதற்குப் பதிலாக ஹர என்று வாய் தவறி அவன் கூறியபோது, சிவபிரானின் பணியாளர்கள், அவனைக் கயிலாயத்துக்கு அழைத்துச் செல்ல, தனக்கு முக்தி அளிக்குமாறு சிவபிரானிடம் இந்திரத் துய்மன் கேட்க, அதற்கு திருக்கடிகை சென்று, ஸ்ரீநரசிம்மனை வணங்குமாறு ருத்ரன் சொன்னார்.

இந்திரத்துய்மன் வரும் வழியில், இந்திரன், இந்திரத்துய்மனைச் சந்தித்து, திருக்கடிகையை ஆண்டு வரும் சுரதன் என்ற மன்னனை வென்று, கும்போதரன் என்ற கொடியவன் அங்கு வாழ்ந்து வரும் வைணவர்களைத் துன்புறுத்துவதாகவும் தான் இது பற்றித் திருக்கடிகைச் சிங்கபிரானிடம் முறையிட்டபோது, அப்பெருமான், இந்திரத் துய்மனால் இத்துன்பம் நீங்கும் என்று கூறியதால், தான் அவனைச் சந்தித்ததாகவும் கூறி, தன் ஆற்றல் பொருந்திய, ஆயுதம், தேர் குதிரை முதலிய வற்றைக் கொடுத்தான். எம்பெருமானின் சங்கு சக்கரங்களின் ஆற்றல் அமைந்த ஆயுதங்களையும் திருக்கடிகை அநுமன் அருளையும், அங்கு நடை பெற்ற போரில் கும்போதரனை வென்று, நரசிம்ம னின் அருளால் திருக்கடிகைக்கு அரனாகி, நரசிம்மரை வழிபட்டு முக்தி அடைந்தார் என்பர்.

சோளிங்கர் மலை மீது சிங்கப்பிரானின் மூலவ ரும், திருக்கடிகை நகரில், பத்தோசித ஸ்வாமி என்ற பெயரில் உத்ஸவரும் கோயில் கொண்டுள்ளனர்.

**சிறப்புகள் :**

அருள் உருவே வடிவாய், அர்ச்சையில்,அருள் வழங்கும் தலமாக, திருக்கடிகை என்னும் திவ்ய தேசம் உள்ளது. ஆந்திர மாநிலத்தில் அகோபிலம் விளங்குவது போல், தமிழ்நாட்டில் குன்றின்மேல் திகழும் பெருமானாக, யோக நரசிம்மர் உள்ளார். அனுமன் இங்கே அர்ச்சை நிலையில், மலை உச்சி யில் அமர்ந்து, யோக நரசிம்மனின் திருவடிகளையே நோக்கி நிற்கிறார். அத்துடன், இந்த அனுமன், நான்கு திருக்கரங்களைப் பெற்று, அவற்றில் இரண்டில், சங்கு சக்கரங்களைத் தாங்கி, மற்ற இரண்டில் ஜப மாலையையும், ஜப எண்ணுதலையும் கொண்டு விளங்குகிறார். திருமாலின் பத்து அவதாரங்களும் பொறிக்கப்பெற்ற யோக பட்டையைச் சிங்கப் பெருமான் அணிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. சூரியனும், சந்திரனும் இப்பெருமானின் திருவடி நிழலில் வாழ்ந்து பேரின்பம் துய்த்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | மூலவர் : யோக நரசிம்மர். அக்காரக்கனி (கடிகாசல மலை உச்சியில், கிழக்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம்) |
| உத்ஸவர் | : | தக்கான், பக்தவத்ஸலப் பெருமாள், பக்தோசித ஸ்வாமி. (மலை அடி வாரத்தில் உள்ள சந்நிதி) |

## ஸப்தகிரி ஏப்ரல் 2025 விடைகள்

1. இரவும் பகலும் சமமான நாள்.
2. சாந்த நரசிம்மர்.
3. ஸ்ரீராமர்.
4. விஷ்ணு புராணம்.
5. ஸ்ரீகோதண்டராமர்.
6. நம்மாழ்வார்.
7. திருவரங்கப் பெருமாள் அரையர்.
8. திருப்புல்லாணி.
9. வெப்பாலை மரம்
10. இராம, கிருஷ்ண அவதாரங்கள்.
11. இலட்சுமணர்.
12. பன்னீராயிரம்.
13. வேங்கடமலைத் தலைவன்.
14. சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரம்.
15. கேரள மாநிலம்.






## போட்டி எண். 33

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி பா.எ.லோகப்பிரியா, முகுந்த நகர், சின்ன காஞ்சிபுரம்.
2. செல்வி ஜி.கே. ஆத்மிகா, ரத்தினம் தெரு, சேலம் மாவட்டம்.
3. செல்வி ச.தீப்ஷிதா, பட்டணம், நாமக்கல் மாவட்டம்.

தாயார் : அமிருதவல்லி (தனிக்கோயில் நாச்சியார்).
விமானம் : சிம்ம கோஷ்டாக்ருதி விமானம், ஸிம்ஹாக்ர விமானம்.
4ம்6ம்தீர்த்தம் : அமிருத தீர்த்தம், தக்கான் குளம், பாண்டவ தீர்த்தம்.

ப்ரத்யக்ஷம் : அனுமன், சப்த ரிஷிகள் (தனிமலையில், அனுமனுக்குத் தனிச் சந்நிதி உண்டு.)
ஆகமம் : வைகானசம்.
மங்களாசாஸனம் : பேயாழ்வார், திருமங்கை ஆழ்வார்.

**விசேஷம்**

நாதமுனிகள், ஆளவந்தார், திருக்கச்சி நம்பிகள், இராமாநுஜர், ஸ்ரீவேதாந்த தேசிகன், ஸ்ரீமணவாள மாமுனிகள் முதலியோரால் வழிபடப் பெற்ற பெருமை உடையது இத்தலம். ஸ்ரீமணவாள மாமுனிகள், திருக்கடிகை எம்பெருமானை "வட திருவரங்கநாதன்" என்று அழைத்ததும், அத்திவ்ய தேசத்தை வட திருவரங்கம் என்று குறிப்பிட்டும், எறும்பி என்ற ஊரில் உள்ள ஏரிக்கு வட திருக்காவேரி என்று பெயரிட்டும், இத்திவ்ய தேசத்தை உயர்த்தி உள்ளார். இவரது சீடர் எறும்பியப்பர் என்பவர் திருக்கடிகையைப் பற்றி ஒரு சதக நூல் இயற்றியுள்ளார்.

திருக்கடிகையின் சந்நிதி வளர்ச்சிக்கு எல்லாம் அடிப்படையாய் விளங்கியவர் முதலியாண்டான் பரம்பரையைச் சார்ந்த தொட்டயாச்சாரியார். காஞ்சி வரதராஜப் பெருமாளைச் சேவிக்க, வைகாசித் திருநாளில் மூன்றாம் நாள் காலையில், காஞ்சிக்கு வர இயலாத தொட்டயாச்சாரியார், திருக்கடிகையில், தக்கான் குளக்கரையிலேயே கருட வாகனத்தில் வரதன் எழுந்து அருளிய காட்சியைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த வரலாறும், அதனை ஒவ்வொரு ஆண்டும் நினைவூட்டும் முறையில், காஞ்சியில் தேவப் பெருமானின் புறப்பாட்டு நிகழ்ச்சி அமைந்திருப்பதும் தொட்டயாச்சாரியாரிடம் காஞ்சி எம்பெருமான் கொண்டிருக்கும் பேரருளைப் புலப்படுத்துகிறது. இவ்வூர்க்குச் சோழ சிங்கபுரம் என்ற பெயர் அமைந்து, தற்போது சோளிங்கர் என்று வழங்கப்பெற்று வருகிறது.

**திவ்ய தேச வாழ்த்துப் பாசுரம்**

*கொக்காரத் தொடு மேவக் கிஞ்சுகங்கள்*
*கொஞ்சிடவே குயில்கள் கூவ*
*விக்காரம் உகுத்திடவே இலங்கு கடிகாசலத்து*
*ஏழ்முனிவர் ஏத்தத்*
*தக்கானாய்த் தமனியன் தன் உரம் வகிர்ந்து,*
*மற்றவன் தனயற்கு என்றும்*
*அக்காரக் கனியாகி அமர்ந்தருளும் கோள் அரி*
*தன் அடிகள் வாழி!"*

## குறுக்கெழுத்துப்புதிர் 107க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | க | ண் | ண | ங் | கு | டி | | | 2 தி |
| ரு | | ம் | த | ர | வி | தி | க் | ச | ரா | 3 ப | ரி |
| க் | 4 ம | து | 5 ரா | மா | நு | ஜ | ர் | | | | ப் |
| க | ண | | ர் | வா | ழ் | ரா | க | சே | ல | 6 கு | பி |
| ட் | வா | 7 ப | த் | ர | லி | ங் | க | ம் | | | ர |
| க | ள | ம் | ட | ட் | வி | அ | ணி | வ | 8 ஆ | | ங் |
| ரை | ப் | ல | | ம் | ல | கோ | ன | ய | 9 ச | | கோ |
| | பெ | த | ழி | மொ | ரு | தி | ள் | மா | ரு | 10 பெ | டு |
| 11 பா | ரு | ஸ் | 12 க | ள் | ள | க் | கு | றி | ச் | சி | |
| கி | மா | பி | டி | ப | ப் | ன | ம | ய | 13 நி | | |
| ர | ள் | 14 க | ங் | ல | த | த் | ன | மா | பி | 15 அ | |
| 16 தி | ரு | ச் | சா | னூ | ர் | தை | ந் | ட | வி | ரு | 17 தி |

**தியானச்லோகம் :**

*யஸ்மிந் கல்வ ம்ருதாக்யயா லலநயா லக்ஷ்ம்யா லஸந் லக்ஷ்யதே*
*லோகே யோகந்ருகேஸரீ கமல பூ பாவாசயாதப்யதே*
*யஸ்மிந் மாருதிநா ஸுதாமயஸரஸ் தீரே புரஸ்தாந் முகம்*
*தம்வந்தே கடிகாசலம் ப்ரதிதினம் ஸிம்ஹாக்ர வைமாநிகம்*

**பாசுரம்**

*பண்டு எல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்*
*கொண்டு அங்கு உறைவார்க்குக் கோயில் போல் வண்டு*
*வளம் கிளரும் நீள்சோலை, வண்பூங்கடிகை*
*இளங்குமரன் தன் விண்ணகர்"*

– திருமங்கையாழ்வார்

*"மிக்கானை, மறையாய் விரிந்த விளக்கை என்னுள்*
*புக்கானைப் புகழ் சேர் பொலிகின்ற பொன் மலையை*
*தக்கானைக் கடிகைத்தடம் குன்றின் மிசை இருந்த*
*அக்காரக் கனியை, அடைந்து உய்ந்து போனேனே."*

– திருமங்கையாழ்வார்

*அருளால் நம்மைத் திருத்தி, நாம்முன் அறியாக்*
*கூர் அறிவும் தந்து அடிமை கொண்டதற்கே - நேரே*
*ஒரு கடிகையும் மனமே உள்ளுகிலாய், முத்தி*
*தரு கடிகை மாயவனைத்தான்*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*901. ஓம் ஸ்வஸ்தித: நம:*

மஹாமங்களம் அளிப்பவன்.

*ஓம் ஸந்த்யா: நம:*

ஜீவாத்மாக்களைப் பகவானுடன் சேர்த்து வைக்கும் ஆற்றல் உடையவள்.

*902. ஓம் ஸ்வஸ்திக்ருத் நம:*

முக்தர்களை ஆசிர்வதிப்பவன்.

*ஓம் ஸுபத்ரா: நம:*

நல்ல மங்களஸ்வரூபி.

*903. ஓம் ஸ்வஸ்தி நம:*

தானே மங்களஸ்வரூபி

*ஓம் ஸர்வமங்களா: நம:*

எல்லா விதத்திலும் மங்களங்களையே உண்டாக்குபவள்.

*904. ஓம் ஸ்வஸ்திபுக் நம:*

மங்களம் அனைத்தையும் காப்பவன்.

*ஓம் நந்தா: நம:*

ப்ரதமை, சஷ்டி, ஏகாதசி திதிகளில் விசேஷமாக ஆராதிக்கப்படுபவள்.

*905. ஓம் ஸ்வஸ்திதக்ஷிண: நம:*

பக்தர்களுக்கு நன்மைகளையே அளிப்பவன்.

*ஓம் பத்ரா: நம:*

த்விதியை, ஸப்தமி, த்வாதசீ திதிகளில் வேறு விதமாகப் பூஜிக்கப்படுபவள்.

*906. ஓம் அரௌத்ர நம:*

சாந்தஸ்வரூபி.

*ஓம் ஜயா: நம:*

த்ருதீயை அஷ்டமி, த்ரயோதசி திதிகளில் இவைகட்கு சக்தியை அளித்து பூஜிக்கப் படுபவள்.

*907. ஓம் குண்டலீ நம:*

குண்டல ஆபரணங்களை அணிந்தவன்.

*ஓம் ரிக்தா: நம:*

சதுர்த்தி, நவமி, சதுர்தசீ திதிகளில் இவைக ளுக்கு ஒருவித சக்தியை அளிப்பவள். அவ் விதமாகப் பூஜிக்கப்படுபவள்.

*ஸ்ரீமதே அம்ருதவல்லீ (அம்ருதபலவல்லீ)*
*நாயிகா ஸமேத ஸ்ரீயோக நரஸிம்ஹ*
*(அக்காரக்கனி) பர ப்ரம்மணே நம:*

**திருக்கோயில் அமைவிடம்**

**சென்னை - காட்பாடி இரயில் மார்க்கத்தில் அரக்கோணத்திலிருந்து 27 கி.மீ. மேற்கே இத்திருத்தலம் அமைந்துள்ளது. திருத்தணி மற்றும் அரக்கோணத்திலிருந்து பேருந்து வசதியும் உள்ளது.**






# தூக்கி எறிவோம்!

– திருமதி எம். நிர்மலா, புதுச்சேரி, 9788390927.

பக்கத்து நாட்டுடன் போர் செய்து வென்ற அரசன், அந்த வெற்றியைக் கொண்டாட அரண்மனையில் விருந்து வைத்தான். அரண்மனைக்கு அருகில் ஒரு பிச்சைக்காரன், தினமும் யாசகம் செய்து பழைய உணவுகளையே சாப்பிட்ட அவனுக்கு "ஒரு நாளாவது அரண்மனை விருந்தைச் சாப்பிட வேண்டும்" என்ற ஏக்கம் இருந்தது. இப்போது அதற்கு வாய்ப்பு வந்திருக்கிறது.

"ஆனால், நான் போக முடியுமா?" தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து, நிச்சயம் உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். மன்னனிடம் யார் யாரோ எதை எதையோ கேட்கிறார்கள். நாம் நல்ல உடை கேட்டால் என்ன?" என எண்ணி, தைரியத்துடன் அரண்மனைக்குச் சென்றான். இவன் துணிச்சலை ரசித்த மன்னன் "உனக்கு என்னுடைய ராஜ உடை ஒன்றைத் தருகிறேன். அதை அணிந்து கொண்டு மகாராஜா போல அமர்ந்து விருந்து சாப்பிடு" என்றான்.

அந்த உடையை அணிந்து கொண்ட பிச்சைக்காரன், கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்த்தான். தன் தோற்றத்தில் கம்பீரம் மிளிர்வதைக் கண்டு வியந்தான். விருந்தில் அவனுக்குத் தனிக் கவனிப்பு கிடைத்தது. தன் வாழ்நாள் கனவு நிறைவேறியதும், மன்னனுக்கு நன்றி சொன்னான். அப்போது மன்னன் ஒரு ரகசியத்தைச் சொன்னான். "இந்த உடை ஒரு முனிவர் எனக்குப் பரிசாகக் கொடுத்தது. விசேஷ சக்தி வாய்ந்தது. இது அழுக்கு ஆகாது. கிழியவும் கிழியாது. வாழ்நாள் முழுக்க துவைக்காமல் போட்டுக் கொள்ளலாம். இந்த உடை தரும் கம்பீரத்தை வைத்து இனியாவது நல்லபடியாக வாழப் பார்" என்றான் மன்னன்.

மன்னனுக்கு நன்றி சொல்லி திரும்பி வந்தாலும் அவனுக்குச் சந்தேகம். "ஒரு வேளை மன்னன் சொன்னது பொய்யாக இருந்து, இந்த உடை கிழிந்து விட்டால் என்ன செய்வது?" அதனால் தனது பழைய கந்தல் உடையை ஓர் அழுக்குத்துணியில் மூட்டையாகக் கட்டிப்பத்திரமாக வைத்துக் கொண்டான். எங்கே போனாலும் அந்த அழுக்கு மூட்டையுடனே சென்றான்.

மன்னன் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவனுக்குப் புரிந்தது. அந்த உடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. என்றாலும் தன் அழுக்குத்துணி மூட்டையைத் தூக்கிப் போட அவனுக்கு மனமில்லை. மக்களும் அவனது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த அழுக்கு மூட்டையையே பார்த்தனர். "அழுக்கு மூட்டை கிழவன்" என அவனுக்குப் பெயரும் வைத்தனர்.

"அந்த அழுக்கு மூட்டையைத் தூக்கிப் போட்டு விட்டு வேறு ஏதேனும் வேலை பார்த்திருந்தால், என் வாழ்க்கையே மாறியிருக்கும்" என்ற உண்மை அவனுக்கு இறக்கும் நேரத்தில்தான் புரிந்தது.

இதிலிருந்து நாம் உணர வேண்டிய கருத்து என்னவெனில்...

அந்த யாசகனிடம் மட்டுமல்ல. நம்மில் பலரிடமும் அப்படி ஒரு மூட்டை இருக்கிறது. அதற்குள் கோபம், கவலை, சோகம், பகைமை, பழி வாங்கும் உணர்வு என்று வேண்டாத பலவும் உள்ளன. அவற்றைத் தூக்கி வீச மனமில்லை. மகிழ்ச்சி என்ற கிழியாத ஆடையை மனதுக்கு உடுத்தி, அதை அழுக்கில்லாமல் வைத்துக் கொள்ளும் வாய்ப்பு இருந்தாலும், அதைப் பலரும் செய்வதில்லை. தேவையற்ற உணர்வுகளைத்தூக்கி எறிந்தால், மகிழ்ச்சி நிரந்தரமாகும்.


# மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய அஷ்டாங்க யோகா

தெலுங்கு மூலம் : திரு.ஜெ.பாலசுப்ரமண்யம்,
தமிழாக்கம் : திரு.வி.ஓ.சுரேஷ், சத்ரவாடா.

"யோகா" என்றால் சேர்க்கை, ஐக்யம் எனப் பொருள்படும். தனித்தனியாக உள்ள இரண்டு பொருட்களை இணைத்தலே யோகா ஆகும். "பரமாத்மா –ஜீவாத்மா" இரண்டினையும் பிரதானமாக இணைக்கச் செய்தலே யோகாவின் உன்னதமான தன்மையாகும். அதனை தெரிவிப்பதே "யோக சாஸ்திரம்" ஆகும். இவ்விரண்டினையும் குறித்து இந்திய தத்துவ சாஸ்திரம் நிரந்தரம் கூறிக் கொண்டே உள்ளது.

"ஜீவாத்மா" என்பது வேறொன்றும் கிடையாது. அது ஆனந்தமயமான, உணர்வுப்பூர்வமான நித்யமான பரமாத்மாவிலிருந்து விடுபட்ட ஜீவாத்மாவானது, அவ்விஷயத்தை மறந்து, புலன்களின் ஏக்கத்தோடு பலவிதமான தவறான செயல்களில் ஈடுபடுகின்றது. அந்த பாவத்தின் பலனாக ஜீவாத்மா மாயங்களுக்கு உட்பட்டு மீண்டும் மீண்டும் பிறந்து மாயங்களில் சிக்குண்டு துன்பங்களுக்கு உட்படுகின்றது. ஆனால், இந்தப் பிறப்பு இறப்புகளிலிருந்து எப்பொழுது விமுக்தி கிடைக்கின்றதோ அப்போதுதான் விடுதலை பெறுகின்றான் இந்த ஜீவாத்மாவான மானிடன்.

பின்னர் தன்னுடைய புலன்களுக்கு எவ்விதத்திலும் ஆட்படாமல் ஏதோ ஒரு ஆன்மீகச் சக்தி தன்னுள் செயல்படுவதைக் கவனிக்கும் மானிடப் பிறவி அதற்கு "யோக சக்தி" எனப் பெயர் வைத்தது. அந்த ஆன்மீகச் சக்தி வாயிலாக ஈர்க்கப்பட்டு, கண்களை மூடிக் கொண்டு தன்னுள் தன்னையே உற்று நோக்கி பயணிக்க ஆரம்பிக்கின்றான். அதன்பிறகு முக்தி பெற முயல்கின்றான். அம்முயற்சி முற்றிலும் தனிப்பட்டதாக விளங்குகிறது. ஒரு ஆத்மா தனிப்பட்ட பாதையில் முக்தி அடைய எத்தனை பிறவிகள் வேண்டுமானாலும் ஆகலாம். இவ்வாறாக யோக சித்தியடைந்த உன்னதமான சப்தரிஷிகள், வியாசர், வால்மீகி போன்ற மகரிஷிகள், சக்கரவர்த்திகள் இவர்களே சனாதன தர்மத்தில் காணப்படுகின்றனர்.



## மகா யோக சாஸ்திரமே பகவத் கீதை:

துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு "ஸ்ரீபகவத் கீதை"யை உபதேசித்து மகாயோக சாஸ்திரத்தைக் கூறினார். அதாவது இதுவே முதல் முறை அன்று. இந்த யோக சாஸ்திரத்தை பல காலங்களுக்கு முன்பாகவே சூரியனுக்கு உபதேசித்தேன். அவர் தன் மகன் மனுவுக்குக் கூறினார். அவர் இக்ஷ்வாகுவிற்குக் கூறினார். அவரிடமிருந்து எத்தனையோ ராஜ ரிஷிகள் உபதேசம் பெற்றதால்தான் இது "ராஜயோகம்" எனக் குறிப்பிடப்பப்பட்டு, அதன் பின்னர் கால போக்கில் மறைந்தும் விட்டது. மீண்டும் இதனை உனக்கு உபதேசிக் கின்றேன் என்கிறார் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா.

ஒருமுறை கபில மகரிஷி புத்திரப் பாசத்தில் இருந்த தன் தாய் தேவ

ஹூதிக்கு இந்த யோக சாஸ்திரத்தை உபதேசித்து பிறப்பு இறப்புகளிலிருந்து அவளுக்கு முக்தி கிடைக்கச் செய்தார்.


அதே போன்று பிள்ளைப் பாசத்தில் துன்பமுற்ற தன் தாய் அனுசுயாவிற்கு சாக்ஷாத் தத்தாத்ரேய ஸ்வாமி தத்துவ உப தேசத்துடன் யோகத்தையும் உபதேசித்து அவளுக்கு ஞான வைராக்கியம் எனும் செல் வத்தை அளித்து தவத்திற்குச் சென்றார்.

இந்த யோகத்தை பயிற்சி செய்வ தினால் முதலில் அம்மனிதனுக்கு உடல் ஆரோக்கியமும், அதன் பின்னர் அமைதியும் கிட்டுகிறது. அதற்குப் பின்னர் பரமாத்மா வின் தரிசனமும் கிடைக்கின்றது. இறுதியாக சாஸ்வதமான அத்தத்துவத்துடன் இணை கிறது.

### மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா ராஜ யோகம்

இவ்வாறாக பரம்பரை பரம்பரையாகத் தொடரும் யோகக் கல்வியைக் குறித்து யோகி மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா “ஸ்ரீவேங்கடாசல மகாத்மியம்” (தெலுங்கு), ராஜயோக சாரம் (தெலுங்கு) எனும் இரண்டு






செய்யுள் காவியங்களோடு “அஷ்டாங்க யோக சாரம்” (தெலுங்கு) எனும் த்விபத காவியத்தையும் படைத்து உள்ளார்.

பிறப்பாலேயே அதீத பக்தி கொண்டவர் வெங்கமாம்பா. சிறுவயதிலேயே வாழ்க்கையில் ஏற் பட்ட விரக்தியின் காரணமாக வைராக்கியம் கொண்டு யோக மூர்த்தியான குரு ரூபாவதாரம் சுப்ரமண்ய யோகி ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட மந்திர தீக்ஷை சித்தியினால் யோக தத்துவத்தில் தரிகொண்ட வெங்கமாம்பா பரம யோகினியாக மாறினார். திருமலைக்குச் சென்று அந்த மகாயோகி தும்புரு தீர்த்தம் போன்ற தீர்த்தங்களிலும், மலைச் சரிவுகளிலும் தீவிரமான தவம் செய்து சித்த யோகியாக மாறினார்.

தனது குருவின் அருளாலும், தீவிர பயிற்சியாலும் தான் பெற்ற யோகக் கல்வியை தெலுங்கு மக்களும் அறிந்திட வேண்டும் எனும் எண்ணத்தில் யோகக் கல்வியை எளிமையாக அறிமுகப்படுத்திய வெங்கமாம்பாவின் திறமை நமக்கு வியப்பினை அளிக்கின்றது.

### பரமாத்மா - ஜீவாத்மா

பரப்பிரம்மத்திற்கு “பரம்” என்றும், “அபரம்” என்றும் இரண்டு வடிவங்கள் உள்ளன. இவற்றில் பரம் எனும் பதம் நிரந்தரமானது (சாஸ்வதம்). இரண்டாவது பதம் அபரம் என்பது க்ஷரம் அதாவது அழியக்கூடியது.




அக்ஷரம் பரமாத்மா, க்ஷரம் ஜீவாத்மா. அப்பரமாத்மா அம்சத்துடன் பிறந்தவனே இந்த ஜீவாத்மா. அவித்யா எனும் மாயத்தினால் பல பிறவிகளும், தேகங்களையும் பெற்று ஆசை எனும் துன்பக்கடலில் மூழ்கி வருகின்றான். அகங்காரம், மமகாரத்தால் பல பாவங்களையும் செய்து மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கின்றான். இது போன்ற ஜீவன்களுக்கு விமுக்தி எப்படி? அவர்களுக்கு பரமயோகினி வெங்கமாம்பா கீழ்க்காணும்படி வழியைக் கூறுகின்றாள்.

### யோகப்பயிற்சிக்கான எட்டுபடிகள்

சத்குருவின் வாயிலாக மட்டுமே யோகா குறித்து தெரிந்து கொண்டு உபதேசம் பெறுதல் வேண்டும். 1) யமம், 2) நியமம், 3) ஆசனம், 4) பிராணாயாமம், 5) ப்ரத்யாகாரம், 6) தியானம், 7) தாரணம், 8) சமாதி எனும் எட்டு படிகளை ஒன்றன் பின் ஒன்றாக கற்றுக் கடக்க வேண்டும்.

யமம் : உணவுக் கட்டுப்பாடுடனும், புலன்கள் கட்டுப்பாடுடனும் சாந்தமாக இருத்தல்.

நியமம் : திடமான, உறுதியான குருபக்தியுடன் ஏகாந்தமாகவும், வைராக்கியத்துடனும் இருத்தல்.

ஆசனம் : இனிமையான நிலையில், நிலையான ஆசனத்தில் அமர்ந்து மனதினை ஒரு நிலைப்படுத்துதல்.

பிராணாயாமம் : காற்றினை குரு கூறும் விதமாக உள்ளிழுப் பதும், வெளியே விடுவதும் ஆகும்.

ப்ரத்யாகாரம் : பிராணாயாமம் வாயிலாக மனக் கவலைகள் இல்லாமல் மனதினை இழுத்து பிடிப்பது.

தியானம் : தன்னுள் உள்ள ஆன்மா எங்கும் வியாபித்திருக்கிறது என்ற உணர்வினை கொண்டு இருப்பதாகும்.

தாரணம் : தன் உள்ளேயும், வெளியேயும் ஒளி வடிவமாக நிறைந்துள்ள பரமாத்மாவை மனதில் நிலையாக வைத்திருத்தல் ஆகும்.

சமாதி : இறுதியில் ஆன்மாவை தண்ணீரில் கரைத்த சக்க ரையைப் போல பரமாத்மாவோடு சேர்ப்பிப்பது.

யோகப் பயிற்சிக்கான இந்த எட்டுப் படிகளோடு மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா சமாதி யோகத்தில் ஷட்சக்கரங்கள், அஜபாகாயத்ரி, லய யோகா முறை, ஹடயோகரா முறை, பௌதி கர்மா, வஸ்திகர்மா, நேதி, த்ராடகா, நௌளிகர்மா, கபாலபாதி போன்ற ஆறுகர்மாக்கள், சூர்ய பேதனா, கும்பகம், உஜ்யோ கும்பகம் போன்ற எட்டு வகையான கும்பகாலம், சாங்க்ய யோகம், தாரகயோகம், அமநஸ்க யோகம் (சாம்பவீமுத்ர), மந்த்ரலயாதி யோக அனுபவம் ராஜயோகி லக்ஷணங்கள், ராஜயோகி ஆத்ம யக்ஞம், இதுபோன்ற எண்ணற்ற யோக பயிற்சிகளைத் தெரியப்படுத்தி

இவையாவையும் சத்குருவிடம் இருந்து உபதேசம் பெற்றுக் கொள்ள வேண்டியவை என தரிகொண்ட வெங்கமாம்பா அருதியிட்டு கூறுகின்றார்.

இவ்வாறு கடுமையான யோகப்பயிற்சியைத் தன் குருவின் மூலமாகவே பெற்ற மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா தொடர் ஆண்டு1730ஆம் வருடம் சித்தூர் மாவட்டத்தில் தரிகொண்டா எனும் ஊரில் பிறந்தார். பின்னர் திருமலைக்குச் சென்று சுமார் 90 வயது வரை அதாவது தொடர் ஆண்டு 1917ஆம் வருடம் ஸ்ரீவராஹ ஸ்வாமி ஆலயத்திற்கு எதிரில் தற்பொழுது உள்ள வராஹ ஸ்வாமி விருந்தினர் குடில் பின்புறம் யோக சமாதி ஆனார். இன்றும் திருமலை திருவேங்கடவன் ஆலயத்தில் தினமும் இறுதியாக நடைபெறுகின்ற "ஸ்ரீவாரி முத்யால ஆரதி"யில் அதாவது ஏகாந்த சேவையின் போது வெங்கமாம்பா யோக சரீரத்தோடு பிருந்தாவனத்தில் இருந்து ஆலயத்திற்கு செல்வதாக நம்பப்படுகின்றது. அது மட்டுமின்றி அப்பரமயோகி திருமலையில் யோக சரீரத்துடன் வலம் வருவதாக சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் தாம் தரிசித்ததாக சத்குரு மலையாள சுவாமிகள் போன்ற மகான்கள் கூறுகின்றனர்.

"உழைப்பிற்கேற்ற ஊதியம்" என்று கூறுவதுபோல சித்தயோகியான மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா கூற்றுப்படி அஷ்டாங்க யோகத்தில் பிராணாயாம ம்ருதலான எட்டு நியமங்களை விரும்புவர்கள் பயிற்சி செய்து வந்தால் உடல் வலிமையும், ஆரோக்கியமும், மன அமைதியும் பெறலாம். மனிதனின் உடல் இறைவனின் அற்புதமான படைப்பாகும். அத்தயைக மனிதனின் உடலினை யோக மகரிஷிகள் அற்புதமாக விளக்கியுள்ளனர்.

இவ்வுடல் ஷட்சக்ராயுதம் என்றும், ஆசனங்களில் மூலாதார சக்ரத்தில் கணபதி வீற்றிருப்பார் என்றும், அதன் இரண்டு அங்குலத்திற்கு மேல் ஸ்வாதிஷ்டான சக்ரத்தில் பிரம்மதேவன் வீற்றிருக்கின்றார். மகாவிஷ்ணு அதற்கு ஆறு அங்குலத்திற்கு மேல் மணிபுர ஆசன சக்ரத்திலும், ருத்ரர் அதற்கு பத்து அங்குலத்திற்கு மேல் இதயத்தில் அனாஹத சக்ரத்தில் தோன்றுகிறார். காந்த பாகத்தில் விசுத்த சக்ரத்தில் சதாசிவ அதிபதி என்றும், நடுவில் உள்ள ஆக்ஞ சக்ரத்தில் பரமாத்மா அதாவது பரபிரம்மம் பிரகாசிப்பதாகவும் கூறப்படுகிறது. அனைத்திற்கும் மேலாக தலைப்பகுதியில் சகஸ்ர சக்ரத்தில் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையில் சத்குரு பதங்கள் தோன்றுகின்றன.



ஏழுமலைவாசன் விற்றிருக்கும் திருத்தலம் கூட ஷட்சக்கரமே ஆகும். பல மகிமைகள் கொண்ட திருத்தலமாகும். ஒவ்வொரு மலையும் ஒவ்வொரு சக்கரங்கள் ஆகும். ஆறு மலைகளையும் கடந்தோமேயானால் இறுதியாக ஏழாவது மலையில் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை. சகஸ்ர சக்ரத்தில் ஆனந்த நிலையம் அமைந்துள்ளது.

மேலும், யோக தத்துவ மந்திரம் கூறுவது போன்று சகஸ்ர சக்ரமாக விளங்கும் ஏழுமலையில் இன்றும் என்றும் யோக சரீரத்துடன் சஞ்சரித்து கொண்டிருக்கும் மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நிர்மாணித்த யோக பாதையில் நாமும் நடக்க முயற்சிப்போம். முயற்சியோடு பயிற்சி செய்து முன்னேறினால் இறைவனின் அருளால் அப்பரம் பொருளை எளிதாகத் தரிசித்திடலாம். உறுதியான மனம் கொண்டு யோக பயிற்சி செய்திடுவோம். ஆனந்த நிலையானின் இன்னருளால் ஆரோக்கியமாக வாழ்ந்திடுவோம். மனதால் இன்பத்தை அனுபவிப்போம். மனித வாழ்க்கையினை அர்த்தமுள்ளதாக்குவோம்.

# புகழ் பெற்ற பூரி தேர்த்திருவிழா



- திரு.நெய்வாசல்
நெடுஞ்செழியன், சிதம்பரம்,
94422 05862 .

இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் ஒடிசா மாநிலத்தில் பூரி நகரில் அமைந்துள்ளது ஜெகன்நாதர் கோயில். விஷ்ணுவின் ஒரு வடிவமான ஜெகன்நாதர் மற்றும் சுபத்ரா ஆகியோருக்காக கட்டப்பட்ட கோயில். இக்கோயிலில் ஜெகன்நாதர், பலராமர் மற்றும் சுபத்ரா ஆகியோரது திருமேனிகள் முகம் மற்றும் கைகளை மட்டுமே காணும் வகையில் பெரியதாக கலிங்க பௌத்த கட்டிடக் கலை பாணியில் உருவாக்கி இருப்பார்கள். இவ்வாலய மூலவர்களின் திருமேனிகள் வேப்ப மரத்தால் ஆனவை. 12 அல்லது 19 ஆண்டுகளுக்கு ஒரு முறை இத்திருமேனிகள் புதிய மரத்தில் செதுக்கப்பட்டு உரிய பூஜைகளுடன் மறுபடியும் பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

### காலம் மற்றும் கட்டுமானம்

அவந்தி மன்னர் இந்திரத்யும்னர் தொடர் ஆண்டு 10 ஆம் நூற்றாண்டில் ஜெகன்நாதரின் பிரதான கோயிலைக் கட்டியுள்ளார். தற்போதுள்ள கோயில்கள் ஏற்கனவே இருந்த இடத்தில் கீழைக் கங்கர் குலமன்னனான ஆனந்தவர்மன் சோடகங்கனால் தொடர் ஆண்டு 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.

கோயில் கட்டுமானம் மற்றும் பூஜை சம்பிரதாயங்கள் ஒடியானா தந்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை மகாயான தந்திரங்களின் சுத்திகரிக்கப்பட்ட பதிப்புகள் மற்றும் தாந்த்ரீக பௌத்தம் மற்றும் பழங்குடி நம்பிக்கைகளிலிருந்து உருவான ஷபரி தந்திரங்கள் ஆகும். உள்ளூர் புராணக்கதைகள் சிலைகளை பழங்குடி மக்களுடன் இணைக்கின்றன. மேலும் தைதாபதிகள் எனப்படும் கோயில் சேவையாளர்கள் பழங்குடியினரின் சந்ததியினர் என்றும் கூறப்படுகிறது.

### வழிபட்டோர் மற்றும் பாடியோர்

சைதன்ய பிரபு, பூரி ஜெகன்நாதரால் கவரப்பட்டு பல ஆண்டுகள் பூரியில் வாழ்ந்தவர். ஜெய தேவர் மற்றும் சாது ராமானந்தரும் இக்கோயிலுடன் தொடர்புடைய மரபுகளைச் சேர்ந்தவர்களுக்கும் புனிதமானது. இராமாநுஜ ஆசாரியார், மத்வாசாரியார், நிம்பர்காசாரியார், வல்லபாசாரியார் மற்றும் ராமானந்தர் போன்ற பல சிறந்த வைணவத் துறவிகள் கோயிலுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். இராமாநுஜர் கோயிலின் தென் கிழக்கு மூலையில் மடத்தை நிறுவினார். மேலும், கௌடிய வைணவ மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் இது குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் நிறுவனர் சைதன்ய மகாபிரபு, ஜகந்நாதரால் ஈர்க்கப்பட்டு பல ஆண்டுகள் பூரியில் வசித்து வந்தார்.



### உற்சவங்களும், திருவிழாக்களும்

இக்கோயிலில் அனுதினமும் நடைபெறும் வழக்கமான வழிபாட்டைத் தவிர அவ்வப்போது பல உற்சவங்களும் நடைபெறுகின்றன. இவைத்தவிர ஆண்டுதோறும் நடைபெறும் ரத யாத்திரை அதாவது மூன்று கடவுள்களைக் கௌரவிக்கும் தேர்த் திருவிழா மிகவும் பிரசித்திப் பெற்றதாகும். இத்திருவிழா ஆண்டிற்கு ஒரு முறை, ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. தேரோட்டத் திருவிழாவில், பல இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் நாடு முழுவதிலிருந்தும் வந்து கலந்து கொள்வர்.

ரத யாத்திரை என்பது வருடாந்திரத் திருவிழா ஆகும். இதில் தெய்வங்கள் கோயிலுக்கு வெளியே எடுத்து வரப்பட்டு தேர்களில் கொண்டு செல்லப்படுகின்றன. தேர்கள் ஜெகன்நாதர் கோயிலிலிருந்து மௌசி மா கோயில் வரை செல்லும். இதில் மூன்று முக்கிய தெய்வங்களும் பிரம்மாண்டமான மற்றும் அலங்கரிக்கப்பட்ட தேர்களில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வரப்படுகின்றன. 16 சக்கரங்களைக் கொண்ட சிவப்பு, மஞ்சள் நிறத் தேரில் பூரி ஜெகன்நாதரும், 14 சக்கரங்களைக் கொண்ட சிவப்பு, பச்சை நிறமுடைய தேரில் பலபத்திரரும், 12 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, கறுப்பு நிறத்தேரில் சுபத்ரா தேவியும் எழுந்து அருளுவர். நம் ஊர்களில் இந்தத் தேரை சப்பரம் என்கிறோம். பாரம்பரிய வழக்கப்படி தேரோடும் ரத்ன வீதியைத் தங்கத் துடைப்பத்தால் பூரி நகர மன்னர் கஜபதி பெருக்கிச் சுத்தம் செய்வார். முதலில் பலபத்திரர் தேரும், அதன் பின்னர் சுபத்ரா தேவி தேரும் புறப்பட்ட பின்பு, இறுதியாக ஜெகன்நாதர் தேர் புறப்படும்.

அருகிலுள்ள குண்டிச்சா கோயிலை நோக்கிச் செல்லும் ரதயாத்திரை வழியில் உள்ள மவுசிமா கோயிலை பிரிக்கும் ஆற்றங்கரையில் நிறுத்தப் படுகிறது. ஜெகன்நாதர் சிறிது நேரம் ஓய்வு எடுப்பார். அதன் பின்னர் சிலைகள் 3 படகுகளில் ஏற்றி ஆற்றைக் கடந்து சென்று மௌசிமா கோயிலுக்குக் கொண்டு சென்று, அங்கு சம்பிரதாய வழிபாடு நடைபெறுகிறது.

பின்னர் அங்கிருந்து படகுகள் மற்றும் தேர்கள் மூலம் புறப்பட்டு மூவரும் மீண்டும் கோயிலை வந்தடைவர். தேரோட்டத்திற்காக ஆண்டு தோறும் 45 அடி உயரமும், 35 அடி அகலமும் கொண்ட புதிய தேர்கள் மரத்தால் செய்யப்படுகிறது. இந்த வழிபாட்டை பில்சபர் பழங்குடி பூசாரிகள் மற்றும் கோயிலில் உள்ள பிற சமூகங்களின் பூசாரிகளுடன் இணைந்து செய்வர்.

### தலச் சிறப்பு :

இக்கோயில் சார்தாம் யாத்திரைத் தலங்களில் ஒன்றாகும். பல புராணக் கதைகள்கிருஷ்ணரின் இதயம் இங்கு வைக்கப்பட்டதாகக் கூறுகின்றன.

### அதிசயங்கள்

சுதர்சன சக்கரத்தின் மேல் பறக்கும் கொடியானது காற்றின் திசைக்கு எதிர்மறையாகப் பறக்கின்றது. ஒவ்வொரு நாளும் சுதர்சன சக்கரத்தின் மீது 20 அடி நீளமுள்ள முக்கோண வடிவில் இருக்கும் கொடியை மாற்ற வேண்டும் என்ற பண்டைய முறையின்படி ஒவ்வொரு நாளும் மாற்றப்படுகிறது. இவ்வாறு மாற்றவில்லை எனில் அசம்பாவிதங்கள் நடைபெறும் என்கிற நம்பிக்கையும் நிலவி வருகிறது.

சராசரியாக 45 மாடி கட்டிடத்தின் உயரத்திற்கு சமமான உயரம் கொண்ட இந்த ஆலய சிகரத்தின் நிழலானது ஒருபொழுதும் கீழே விழுவதில்லை. இந்தக் கட்டிடக்கலை பாராட்டத்தக்கது.

உலோகத்தாலான ஒரு டன் எடை கொண்ட சுதர்சன சக்கரம் எவ்வித இயந்திர உதவியும் இன்றி மனித சக்தியால் மட்டும் எவ்வாறு பொறுத்தினர் என்பது ஆச்சரியமான விஷயமே! இந்த சக்கரத்தை எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் ஒரே விதமாகவே காணப்படுகிறது. இந்த தொழில்நுட்பமும் வியக்கத்தக்கதே.

இறைவனே மேலானவன். ஸ்ரீஹரிக்கு மேற்பட்டவர் யாரும் இல்லை என்கிற தத்துவத்திற்கு இணங்கிய விதமாக இவ்வாலயத்தின் மேல் எந்த

ஒரு பறவையும் பறப்பதில்லையாம். இதிலிருந்து ஸ்ரீஜெகந்நாதரே இந்த ஜெகத்தில் உயர்ந்தவர் என்பதை உணரலாம்.

ஆலயத்தில் சிம்ம துவார நுழைவாயிலில் நுழைந்த உடனே அலைப்பறிக்கும் அலைகளின் ஓசையானது நம் செவிக்கு கேட்பதில்லை. இந்த நிகழ்வு மாலை நேரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மீண்டும் ஆலயத்திலிருந்து வெளியே வந்தால் அதை திரும்ப உணரலாம்.

ஜெகந்நாதர் ஆலயத்தில் தயாராகும் பிரசாதங்கள் ஒரு பிடிக்கூட வீணாவது இல்லை. ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு நாளும் 2,000 முதல் 2,00,000 பேர் வரை வேறுபடுவது யாராலும் நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆனாலும் வரும் அனைத்து பக்தர்களுக்கும் சரிபோகும் விதமாக அன்றைய பிரசாதங்கள் இறைவனின் அருளாலே தயாரிக்கப்படுகின்றன.

பிரசாதம் சமைக்கும் பாரம்பரிய முறை இங்கு உள்ள பூசாரிகளால் பாதுகாக்கப்படுகிறது. மேலும் அவை விறகுகளைப் பயன்படுத்தி சமைக்கப்படுகின்றன. சரியாக ஏழு மண் பாண்டங்கள் ஒன்றின்மீது ஒன்று வைத்து பிரசாதம் சமைக்கும் போது மேலே வைக்கப்பட்ட மண்பாண்டங்களில் உள்ள உணவு முதலில் சமைக்கப்படுகிறது. அதற்கடுத்து ஆறாவது மண்பாண்டம். அவ்வாறு அடுப்பில் முதல் மண் பாத்திரத்தில் இருக்கும் உணவு இறுதியாக சமைத்து இறக்கப்படுகிறது. இந்நிகழ்வு மிகவும் ஆச்சரியப்பட வைக்கிறது.

இவ்வளவு சிறப்புகள் நிறைந்த பூரி ஜெகன் நாதர் திருகோயில் திருத்தேர் விழாவில் பங்குபெற்று ஜகன்நாதரின் திருவருளை பெறுவோம்.





# திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்

திருமலையில் நடைபெறும் வருடாந்திர உற்சவங்களில் ஜ்யேஷ்டாபிஷேகத்திற்கு முதன்மையான இடம் உண்டு. ஆனி என்கிற ஜ்யேஷ்ட மாதத்தில் (ஜ்யேஷ்ட என்றாலே முதன்மை, பெரியது என்றெல்லாம் பொருள் உண்டு) பௌர்ணமியுடன், கேட்டை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், கிரிஷ்ம ருதுவில் நடைபெறுகின்ற இந்த உற்சவத்தில் எம்பெருமான் ஸ்ரீமஹாவிஷ்ணுவை திருவிக்ரம அவதாரமாகக் கொண்டாடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இந்த ஜ்யேஷ்ட அபிஷேகத்தை "அபித்தேயக அபிஷேகம்" என்றும் சொல்வதுண்டு. அபிதேயகம் என்றால் கவசம் (காப்பாற்றும் தகடு). சுமார் 800 வருடங்களுக்கு முன்பாக திருமலையின் ஒரு பகுதியான மலையப்ப கோனை என்கிற காட்டுப் பகுதியில் திருவேங்கடத்து எம்பெருமானின் உற்சவ மூர்த்தியான மலையப்ப ஸ்வாமியின் திருமேனி விக்ரகத்தை கண்டெடுத்திருக்கிறார்கள்.

புராதனமான இந்த விக்ரகத்தை காப்பாற்றும் பொருட்டே இந்த ஜ்யேஷ்டாபிஷேக உற்சவம் நடைபெறுகிறது. இந்த ஜ்யேஷ்டாபிஷேகம் வளர்பிறை திரயோதசியில் தொடங்கி பௌர்ணமியன்று முடிவடைகிறது. இந்த அபிஷேகத்தின் விசேஷம் என்னவென்றால் இந்த மூன்று நாட்களும் கவசமில்லாத ஸ்வாமியின் பூரண திருமேனியைத் தரிசிக்கும் பாக்யம் பக்தர்களுக்கு கிடைக்கிறது.

இந்த வருடம் இந்த சேவை...

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் |
|---|---|---|
| 09-06-2025 | திங்கள் | வைரக் கவசம் அணிவித்தல் |
| 10-06-2025 | செவ்வாய் | முத்து கவசம் அணிவித்தல் |
| 11-06-2025 | புதன் | தங்கக் கவசம் அணிவித்தல் |

அப்பிள்ளை அருளிய
ஆழ்வார் ஆசார்யர்கள்
வாழித்திருநாமமும் உரையும்

# கூரத்தாழ்வான்

- ஸ்ரீ உ.வே. டாக்டர்
மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972

ஸௌம்ய வருடம் தை மாதம் வியாழக் கிழமை, பஞ்சமி, ஹஸ்த நக்ஷத்ரத்தில் காஞ்சிக்கு அருகிலுள்ள கூரம் என்னும் அக்ரஹாரத்தில் இராமபிரானுடைய அம்சமாக அவதரித்தவர் சிறப்புமிக்க கூர குலத்துக்குத் தலைவரான ஸ்ரீவத்ஸாங்கர் என்னும் கூரத்தாழ்வான் ஆவர். இவர் திருத்தகப்பனார் அநந்தர். திருத்தாயார் பெருந்தேவி நாயகி. இவர் திருநாமங்கள் கூரத்தாழ்வான், கூரேஸர், கூராதிபர், கூராதிபதி, கூரநாதர். ஸ்ரீவத்ஸசிஹ்நர் மற்றும் ஸ்ரீவத்ஸாங்கர் ஆகும்.

*சீராரும் திருப்பதிகள் சிறக்கவந்தோன் வாழியே*
*தென்னரங்கர் சீரருளைச் சேருமவன் வாழியே*
*பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே*
*பாடியத்தின் உட்பொருளைப் பகருமவன் வாழியே*
*நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே*
*நாலூரான்தனக்கு முத்தி நல்கினான் வாழியே*
*ஏராரும் தையில் அத்தத்தில் இங்கு வந்தான் வாழியே*
*எழில் கூரத்தாழ்வான் தன் இணையடிகள் வாழியே.*

**பதவுரை**

சீராரும் – பெருமை நிறைந்த, திருப்பதிகள் – திவ்யதேசங்கள், சிறக்க வந்தோன் – சிறப்புறச் செய்தவர், வாழியே – வாழவேண்டும். தென்னரங்கர் – திருவரங்கத்திலுள்ள அரங்கன், சீரருளை – பெருமை பொருந்திய அருளை, சேருமவன் – பெற்றவர். பாராரும் – மூவுலகத்தாரும் கொண்டாடும்.

எதிராசர் – இராமாநுசர், பதம் – திருவடிகளை, பணிந்தோன் – தொழுதவர். பாடியத்தின் – ஸ்ரீபாஷ்யத்தின், உட்பொருளை – ஆழ்பொருளை, பகருமவன் – சொல்லுபவர். நாராயணன் – ஸ்ரீமந்நாராயணன், சமயம் – தர்சனம். நாட்டினான் – நிலைபெறச்செய்தவர். நாலூரான்தனக்கு – நாலூரான் என்னுமவருக்கு. முத்தி –முக்தி, நல்கினான் – வழங்கியவர். ஏராரும் – அழகு நிறைந்த, தையில் அத்தத்தில் – தை மாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தில், இங்கு வந்தான் – இந்த உலகில் தோன்றியவர். எழில் – அழகான, கூரத்தாழ்வான் – கூரத்து நகரை ஆண்ட ஆழ்வான், தன் இணையடிகள் – அவர்களின் இரு திருவடிகள், வாழியே – வாழவேண்டும்.

**சிறப்புரை**

(சீராரும் திருப்பதிகள் சிறக்க வந்தோன் வாழியே) திருப்பதி என்பது திருமால் அர்ச்சாரூபியாய் எழுந்தருளி இருக்கும் திவ்ய ஸ்தலமாகும். திருப்பதிகளுக்குச் சீர்மையாவது பொய்கையாழ்வார் தொடக்கமாக ஆண்டாள் ஈறாக பன்னிரண்டு ஆழ்வார்களால் பாடப்பட்டவை ஆகும்.



அவை 108 திவ்ய தேஸங்கள். அவையாவன சோழநாட்டுத் திருப்பதிகள் 40. பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் 18. மலைகள் நிறைந்த சேர நாட்டுத் திருப்பதிகள் 13, சிறந்த நடு நாட்டுத் திருப்பதிகள் 2. தொண்டை நாட்டுத் திருப்பதிகள் 22. வடநாட்டுத் திருப்பதிகள் 12. பரமபதம் என்ற திவ்ய லோகம் 1. ஆக 108 திருப்பதிகள். கூரத்தாழ்வான் எம்பெருமானாரைப் பற்றுவதற்கு முன்பாக கூரத்திலிருந்து எழுந்தருளும்போது காஞ்சி, முதலான திவ்யதேசங்களை மங்களாஸாஸனம் செய்தார்.

பின்னர், எம்பெருமானாரோடு ஆழ்வானும் திவ்ய தேச யாத்ரை மேற்கொண்டார். எம்பெருமானாருடன் காச்மீரம் சென்று போதாயன வ்ருத்தியை ஸேவித்து ஸ்ரீபாஷ்யம் பட்டோலை கொள்ள உசாத்துணையாயிருந்தார். அதனால் வடநாட்டு திவ்ய தேஸங்களையும் எம்பெருமானாரோடு சேர்ந்து சேவித்தபடி. மேலும், ஆழ்வான் ராமாநுஜர் விஷயமாக அருளிய ***''யோ நித்ய...ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே''*** என்ற அற்புதமான தனியன் தினமும் பெரும்பாலான திவ்யதேசங்களில் திவ்ய ப்ரபந்தம் ஓதும் முன் அநுஸந்திக்கப்பட்டு வருகிறது காணலாம்.

இதனால் திருப்பதிகள் சிறக்க வந்ததற்குக் காரணமான ஆழ்வானுக்கு பல்லாண்டு பாடுவோமாக. சிறப்புகள் பொங்கும் திருமால் திருப்பதிகள் அனைத்தும் இன்னும் சிறப்பாக விளங்க பெரியநம்பிகளுடன் பின் தொடர்ந்து வந்தவர் வாழ்க.

(தென்னரங்கர் சீர் அருளைச் சேருமவன் வாழியே) தென்னரங்கர்க்குச் சீர்மையாவது அழகு. அது திருவபிஷேகமும் திருவடித் தாமரையும் ஒளிபெற்று விளங்குவதாகும். ஆழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் திருவடியின் அழகை அனுபவிப்பது காணலாம்.

அதாவது அத்திருவடிகள் புருஷோத்தம லக்ஷணம் பொலிய நிற்குமாம். அதாவது வஜ்ராயுதத்தை உள்ளடக்கிய சின்னம். த்வஜ ரூபமான சின்னம், அங்குச ரூபமான சின்னம், அம்ருதகலச ரூபமான சின்னம், ஆதபத்ரரூபமான சின்னம், தாமரைப் பூமயமான சின்னம் என்று பலவாறு உள்ள அழகை அநுபவித்து அத்தகையோன் அருள் பெற்றவர் ஆழ்வான் என்றபடி.

அரங்கன் அருள் பெற்றவிதமாவது இராமாநுசர் திருவரங்கத்தில் இருந்தபோது, அவரிடம் விண்ணப்பம் செய்யாமல் ஸந்நிதிக்குச் சென்று நம்பெருமாளிடம் ஒரு சுலோகத்தைச் சொல்லி உபந்யஸிக்க, பெருமாளும் “உமக்கு வேண்டியதெல்லாம் தருகிறோம். வேண்டிக் கொள்ளும்” என்று உகப்பின் மிகுதியாலே சொல்ல. ஆழ்வானும் “உம்மை அனுபவிப்பதற்கு விரோதியான

புத்தக மதிப்புரை



விலை : ரூ.120/-

## தசாவதாரம்

நூலாசிரியர் :
திரு. பி.எல்.முத்துக்குமரன்
கிடைக்குமிடம்:
முல்லை பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி,
அண்ணா நகர் மேற்கு,
சென்னை – 600 040.
செல் : 98403 58301.

ஸ்ரீமகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்கள் பற்றி எடுத்துரைப்பது இந்நூல்.

துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனத்துக்காக திருமால் ஒன்பது அவதாரங்கள் எடுத்தார். கடைசி அவதாரமான கல்கியை இனிமேல் தான் எடுக்க இருக்கிறார். இந்தப் பத்து அவதாரங்களின் சரித்திரத்தையும், அந்த அவதார விசேஷங்களிலுள்ள நுண்ணிய கருத்துக்களையும் முத்துக்குமரன் அவர்கள் இந்த நூலில் தெளிவான தமிழ் நடையில் எடுத்து உரைத்திருக்கிறார். இப்புத்தகத்தில் உள்ள கதைகள் நைமிசாரண்ய மகிரிஷிகளுக்கு சூதபுராணிகர் சொன்னபடி அமைந்திருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது.

“எளிய சுவையான தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கும் இந்த நூலை பெருவாரியான மக்கள் படித்துப் பயன் பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் முல்லை பதிப்பகத்தார் தமிழுக்கு நல்லதொரு சேவையைச் செய்திருக்கிறார்கள்” என்று பிரபல சரித்திர நாவல் ஆசிரியர் சாண்டில்யன் அவர்கள் இந்நூலைப் பாராட்டியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

– முல்லை மு. இராமன், சென்னை

இச்சரீரத்தை விடுவித்து, உம் அனுபவத்தைத் தந்தருள வேண்டும்” என்று வேண்டினார்.

பெருமாளும் “அத்தை ஒழிய வேறு கேளும்” என்று சொல்ல, ‘‘தாம்வேண்டும் காமமே காட்டும் கடிது’’ என்று பூதத்தாழ்வார் அருளியபடியே “அடியேன் விரும்பியதையே தந்தருள வேணும்” என்று வேண்ட, “ஆகில் உமக்கும் உம்முடைய ஸம்பந்தமுடையார்க்கும் பரமபதம் தந்தோம்’’ என்று அருளி, திருப்பரியட்டமும், தளிகை பிரஸாதமும், பூந்தண்துழாயும் திருக்கைச் சிறப்பும் கொடுத்து அருளினார். என்னே! அரங்கன் திருவருளைச் சேர்கின்றவர் ஆழ்வான்.

(பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே) பூமி எங்கும் நிறைந்த புகழுடையவர்

## திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

02-06-2025 முதல் 10-06-2025 வரை





01-06-2025, ஞாயிற்றுக்கிழமை
அங்குரார்ப்பணம்

02-06-2025, திங்கட்கிழமை
காலை : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

03-06-2025, செவ்வாய்க் கிழமை
காலை : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

04-06-2025, புதன் கிழமை
காலை : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

05-06-2025, வியாழக்கிழமை
காலை : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

06-06-2025, வெள்ளிக்கிழமை
காலை : மோகினி அவதாரம்
இரவு : கருட சேவை

07-06-2025, சனிக்கிழமை
காலை : ஹனுமத் வாகனம்
மாலை வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

08-06-2025 ஞாயிற்றுக்கிழமை
காலை : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

09-06-2025, திங்கட்கிழமை
காலை : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

10-06-2025, செவ்வாய்க் கிழமை
காலை : சக்கர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸ்ரீமாந் பரம் தத்த்வமஹம் மதம் மே பே$_4$த$_3$: ப்ரபத்திர்நிரபாயஹேது: ।*
*நாவச்யகீ ச ஸ்ம்ருதிரந்த்யகாலே மோக்ஷோ மஹாபூர்ண இஹார்யவர்ய:॥*
*இத்யர்த்த$_2$ஷட்கம் வரதே$_3$பதி$_3$ஷ்டம் ராமாநுஜார்யாய ஸ சாத$_2$ பூர்ண:।*
*ரஹஸ்யவாதீ$_3$த் ஸ ரஹஸ்யவாதீ$_3$ தஸ்மாத்$_3$தி$_4$ ராமாநுஜமாந்யநாமா ॥*

(40, 41)

(1) ஸ்ரீமானான நானே பரதத்த்வம். (2) உலகிற்கும் எனக்கும் பேதம் உண்டு என்பதே என் மதம். (3) என்னை சரணமடைவதே என்னைப் பெறுவதற்குக் கண்ணழிவற்ற உபாயம். (4) அப்படி சரணமடைந்தவர்களுக்கு அந்திம



காலத்தில் என் நினைவு தேவையில்லை. (5) இப்பிறப்பின் இறுதியிலேயே (அவர்களுக்கு) மோக்ஷம் உறுதி. (6) பெரிய நம்பியே இராமாநுஜரால் ஆசார்யராக ஆச்ரயிக்கத்தக்கவர் என்னும் ஆறு வார்த்தைகளையும் வரதராஜப் பெருமாளிடமிருந்து பெற்ற ரஹஸ்யவாதியான திருக்கச்சி நம்பி அவ்வார்த்தைகளை இராமாநுஜருக்கு ரஹஸ்யமாகக் கூறி, அதனால் “ராமாநுஜ மாந்யர்” (இராமாநுஜராலும் கௌரவிக்கப்பட்டவர்) என்னும் பெயரைப் பெற்றார்.

**– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது**

எதிராசர். இவர் காஞ்சியில் ஆச்ரம ஸ்வீகாரம் பெற்றதனைக்கேட்டு முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் மிக்க விரைவாக பெருமாள் கோயில் வந்து இராமாநுசரைச் சேவித்து, தங்களுக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்ய வேண்டினர். இராமாநுசரும் பஞ்சஸம்ஸ்காரம் செய்தார்.

ஆழ்வானும் இறையும் அகலகில்லாத கைங்கர்ய நிஷ்டராய்க்கொண்டு இராமாநுசர் பதம் பணிந்து ஸேவித்திருந்தார். மேலும், ஆழ்வானுடைய ராமாநுஜ பக்தி *‘‘ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே’’* (ஸ்ரீவை.ஸ.1) என்றும், *‘‘ராமாநுஜாங்க்ரி சரணோஸ்மி’’* (வரத. 102) என்றும், *‘‘ராமாநுஜார்ய வஶக: பரிவர்த்திஷ்ய’’* (ஸுந். 129) என்று சுலோகங்களில் காணலாம்.

இவற்றுள் முதல் இரண்டு இடங்களில் ஆழ்வான் தாம் எம்பெருமானார் திருவடிகளில் சரணம் புகுந்ததாகவும், மூன்றாமிடத்தில் எம்பெருமானார்க்குப் பரதந்த்ரராய் அவர்தம் திருவடிநிழலில் நித்யவாஸம் செய்ய வேண்டுவதாகவும் உள்ளமை நினைக்கத்தக்கது. அக்காலத்திலே ஆழ்வான் கூரம் எழுந்தருளி ஆசார்ய ஸேவைக்கு வேறாக இருக்கக் கூடாது என்று எல்லாவற்றையும் துறந்து, பெருமாள் கோவில் வந்து திருக்கச்சிநம்பிகளை ஸேவித்து. பின்னர் தம் மனைவியான ஆண்டாளுடன் வழியில் உள்ள திவ்ய தேஸங்களைச் சேவித்து திருவரங்கம் எழுந்தருளினார்.

ராமாநுஜரையே எல்லா ஸம்பத்துமாக நினைத்து மடத்திலே புகுந்து “இராமாநுசன் என்தன் மாநிதியே” என்றும், “இராமாநுசன் சரணேகதி வேறு எனக்கே” என்றும், “இராமாநுசன் என்தன் சேமவைப்பே” என்றும் சொல்லுகிறபடியே இராமாநுசர் திருவடிகளை ஸேவித்திருந்தார்.

இவரை ஆயிற்று முக்கிய சீடராக முதலில் பெரிய திருமந்த்ரம் முதலான ரகசியங்களை அருளி அபிமானித்திருந்தார் இராமாநுசர். மேலும், நர நாராயண அவதாரம் என்னலாம்படி அன்றோ இராமாநுசர் கூரத்தாழ்வான் சேர்க்கை இருப்பது. எல்லாரும் ஒரு தட்டும் ஆழ்வான் ஒரு தட்டுமாகவன்றோ இராமாநுசர் எண்ணி இருப்பது. அத்தைக் குறித்து ஒரு மகள் தன்னை உடையேன் என்றாறன்றோ இராமாநுசர். இப்படி ஒப்பற்றது ஆயிற்று இரண்டு விஷயம் என்பர் பிள்ளைலோகம் சீயர். அத்தகையோர்க்கு பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாம உரை தொடரும்...

பறவைகளின் அரசனாகவும், வேதங்களின் அம்சமாகவும் வணங்கப்படும் கருடனை ஸ்ரீமஹா விஷ்ணு வாகனமாகக் கொண்டதோடு, தன் கொடியிலும் வைத்துக் கொண்டார். வைகுண்டத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவை எப்போதும் வழிபட்டுக் கொண்டிருக்கும் நித்ய சூரிகளில் கருடனும் ஒருவர். பெரிய திருவடி என்று வணங்கப்படும் கருடனைஅனைத்து வைணவ ஆலயங்களிலும் பெருமாள் கருவறைக்கு எதிராக தனிச் சன்னதியிலும், உத்சவ சமயங்களில் கொடியேற்றத்தின் போது (துவஜாரோஹணம்) கருடன் இருப்பதையும் காணலாம்.

தமிழ்நாட்டில் சீர்காழி திருநாங்கூர் திருத் தலத்தில் உள்ள மணிமாடக் கோவில் என்ற திவ்ய தேசத்தில் நடைபெறும் 11 கருட சேவை மிகவும் பிரசித்தமானது. இந்த மகத்தான உத்சவத்தில் திருநாங்கூர் திவ்ய தேசங்கள் எனப்படும் காவலம் பாடி, திருவண்புருஷோத்தமம், மணிமாடக் கோவில், அரிமேய விண்ணகரம், செம்பொன்செய் கோவில், வைகுண்ட விண்ணகரம், திருவெள்ளக் குளம், திருத்தேவனார் தொகை, திருத்தெற்றி அம்பலம், மணிக்கூடம், திருப்பார்த்தன்பள்ளி ஆகிய பதினொரு திவ்ய தேசமூர்த்திகள் ஒரே இடத்தில் கூடி பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கின்றனர்.

அதேபோன்று கும்பகோணம் நகரில் சித்திரை மாதம் அட்சய திருதியை அன்று 14 வைணவ ஆலயங்களைச் சேர்ந்த பெருமாள்கள் கருட வாகனங்களில் பெரிய கடை வீதியில் ஒரு சேர காட்சி தருவதும், வைகாசி திருவோண நன்னாளில் தஞ்சாவூரில் 24 பெருமாள் ஆலயங்களில் இருந்து கருட வாகனங்கள் வெண்ணாற்றங்கரையில் ஒரு சேர கூடி தரிசனம் தந்து வீதியுலா வருவதும் இம்மாவட்டத்தின் முக்கியமான கருட சேவை திருவிழாக்களாகும்.

இந்த வரிசை யில் தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி திவ்ய தேசத்தில் வைகாசி விசாக பிரம்மோத்ஸவத்தின் போது நடைபெறும் நவ கருட சேவை (ஒன்பது கருட சேவை) ஒரு முக்கியமான விழாவாக பக்தர்களால் கொண்டாடப் படுகிறது.

ஸ்ரீமத்பாகவதத்தில் மன்னன் நிமிக்கும் கரபஜனா என்ற முனிவருக்கும் நடைபெற்ற சம்வாதத்தில் கலியுகம் துவங்கும்போது, மக்கள் இடையே பக்திப் பயிரை வளர்க்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் தாமிரபரணி, வைகை, காவிரி போன்ற நதிக்கரையில் திருமால் பக்தியில் ஆழங் கால் பட்டவர்களான ஆழ்வார்கள் அவதரிப்பர் என்ற குறிப்பு உள்ளதாம்.

அதன்படியே துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் தம் அவதார காரியம் முடிந்து வைகுண்டம் திரும்பிய பின்னர், நாற்பது ஆண்டுகள் கழித்து பன்னிரு ஆழ்வார்களில், திருமாலின் சேனைத் தலைவரான விஷ்வக்சேனர் என்ற சேனை முதல்வரின் அம்சமாக அவதரித்தவரும்,





# வைகாசி விசாகத் திருவிழா

திருமதி
விஜயலட்சுமி
சுப்பிரமணியம்,
கல்லிடைக்குறிச்சி,
98425 39275.



ஆழ்வார்களில் முதன்மை யானவராகப் போற்றப்படு பவருமான நம்மாழ்வார் தாமிர பரணி ஆற்றின் தென் கரைத் தல மான திருக்குருகூர் என்ற திருத் தலத்தில் அவதரித்தார்.

திருக்குருகூர் என்ற இத்தலம் பாண்டிய நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பதினெட்டு திவ்ய தேசங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. நம்மாழ்வார் அவதரித்தபடியால் இந்தத் திருக் குருகூர் திருத்தலம் ஆழ்வார் திருநகரி என்று அழைக்கப்படுகிறது. கலியுகம் பிறந்து, 42 நாட்கள் கடந்து, 43வது நாள், ஒரு வைகாசி விசாக நாளன்று, பிற ஆழ்வார்களை தன்னுடைய அவயவங்களாகக் கொண்டு நம்மாழ்வார் அவதரித்ததாக ஐதீகம்.

திருமால் நம்மாழ்வாராக அவதரிப்பதற்கு முன்பாகவே எப்போதும் அவருடன் இருக்கும் நித்ய சூரியான அனந்தன் என்ற ஆதிசேஷன் ஒரு புளிய மரமாக இத்தலத்தில் உள்ள ஆலயத்தில் தோன்றி னார். மேலும், இராமாயண காலத்தில் அயோத்தி யில் ஸ்ரீராமபிரான் ஏகாந்தமாக இருந்த போது யாரையும் உள்ளே விட வேண்டாம் என்று லட்சுமண னிடம் ஆணையிட்டிருந் தார். ஆனால், அங்கு வந்த கோபத்திற்குப் பெயர் பெற்ற துர் வாச மஹரிஷியை உள்ளே அனு மதித்ததால் லட்சுமணர் கலி யுகத்தில் பூலோ கத்தில் ஒரு புளிய மரமாகப் பிறக்க வேண்டும் என்று இராமபிரான் சாபமிட்டதோடு, தான் அந்தப் புளிய மரத்தின் கீழ் வந்து தங்கப் போவதாகவும் தெரிவித்தாராம். அந்த சாபத்தின் படியே ஆதிசேஷனின் அம்சமான லட்சுமணர் புளியமரமாகத் தோன்றி னார்.



நவதிருப்பதிகளில் ஒன்றான ஆழ்வார் திருநகரி ஸ்ரீஆதிநாதப் பெருமாள் ஆலயத்தில் நம்மாழ் வாருக்குத் தனிச் சன்னதியும், அவர் தியானத்தில் இருந்த புளிய மரமும் உள்ளன. இரவில் இலைகள் மூடிக்கொள்ளாத இந்த புளிய மரம் உறங்காப்புளி என்றும், நம்மாழ்வா ரோடு சம்பந்தப்பட்டதால் திருப்புளி ஆழ்வார் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த ஆலயத்தில் நம்மாழ்வாரின் அவதார நட்சத்திரமான வைகாசி விசாகத்தன்று தீர்த்தவாரி நடைபெறும் வகையில் பத்து நாட்களுக்கு மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாவது நாள் இங்கு ஆழ்வார் திருநகரி உட்பட அருகருகில் உள்ள ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீவைகுண்ட நாதப் பெருமாள், வரகுணமங்கை ஸ்ரீவிஜயாசனப் பெருமாள், திருப்புளிங்குடி ஸ்ரீகாய்சின வேந்தன், பெருங்குளம் ஸ்ரீமாயகூத்தன், இரட்டைத் திருப்பதி ஸ்ரீதெய்வபிரான் மற்றும் ஸ்ரீஅரவிந்த லோசனன், தென் திருப்பேரை ஸ்ரீபூமிபாலர், திருக்கோளூர் ஸ்ரீவைத்தமாநிதி திவ்ய தேசங்களின் உற்சவ மூர்த்தி கள் பக்தர்களுக்கு ஒரு சேர காட்சியளிக்கும் நவ கருட சேவை (ஒன்பது கருட சேவை) மிகக் கோலாக லமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த ஒன்பது திவ்ய தேசங்களும் ஒன்பது கிரகங்களுக்குரிய பரிகாரத் தலங்களாகக் கருதப் படுவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாவது நாள் நடைபெறும் கருட சேவையின் போது மேலே குறிப் பிட்ட ஒன்பது மூர்த்திகளும் காலையில் ஆழ்வார் திருநகரியில் கூடுவதும், அவர்களை நம்மாழ்வார் வரவேற்று ஆலயத்திற்குள்ளே அழைத்துச் செல்வ தும், அவர்களுக்குத் திருமஞ்சனம் நடைபெறுவ தும், மாலை அவர்கள் கருட வாகனங்களில் எழுந்தருளி மாட வீதிகளில் திருவீதி உலா வந்து அதிகாலை ஆழ்வார் திருநகரி திரும்பி, பின்னர்



தத்தம் திருத்தலங்களுக்கு அவர்களை ஆழ்வார் வழி அனுப்பி வைக்க, திரும்பி செல்கின்றனர்.

இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் பல்வேறு சடங்கு, சம்பிரதாயங்கள், பிரபந்த கோஷ்டி, வேதபாராயணம், சாத்துமுறை, அரையர் சேவை, ஆரத்தி போன்றவற்றில் மனத்தைப் பறி கொடுத்து, பரவசமடையாத பக்தரே கிடையாது எனலாம். ஒன்பது கருட வாகனங்களில் மிக அழகாக அலங்கரிக்கப் பட்ட நவத் திருப்பதி மூர்த்திகளும் ஒரு சேர எழுந்தருளி காட்சி தருவதைக் காண தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இத்தலத்தில் வந்து கூடுகின்றனர்.

ஆழ்வார் திருநகரி திருத்தலத்தைச் சுற்றிலும் எட்டு பெருமாள்களும் கருட சேவை நாளன்று அதிகாலை மங்களவாத்தியங்கள், பிரபந்த கோஷ்டி சகிதம் பல்லக்கில் கிளம்பி ஆழ்வார் திருநகரி ஆலயத்தை அடைகின்றனர். அவர்கள் எழுந்தருளும் கருட வாகனங்களும் தனியே இங்கு வரப் படுகின்றன. ஒன்பது கருட சேவை பெருமாள்களும் எழுந்தருளும் பொருட்டு ஸ்ரீஆதிநாதப் பெருமாள் முன்பாக பந்தல் மண்டபம் உள்ளது.



ஆலய வாயிலில் நம்மாழ்வார் அனைத்து பெருமாள்களையும் வர வேற்று மூன்று முறை வலம் வந்து கற்பூர ஆரத்தி முடிந்தவுடன் பெருமாள் சார்பில் பரி வட்டம், சடாரி மரியாதைகள் ஆழ்வாருக்குச் செய்யப்படு கின்றன. அனைத்துப் பெருமாள்களுக்கும் இவ்வாறு வரவேற்பு முடிய மூன்று மணி நேரம் ஆகும். மாலை ஐந்து மணிக்கு ஒரே நேரத்தில் ஒன்பது பெருமாளுக்கும் விரிவான திருமஞ்சனம் நடைபெறுகிறது. இந்தத் திருமஞ்சனத்தின் பொருட்டு அருகில் உள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்து குடை வாத்திய கோஷ்டியோடு குடங்களில் புனித நீர் எடுத்து வரப்படுகிறது. இதே சமயத்தில் கருட வாகனங்களுக்கும் சிறப்பு அலங்காரங்கள் செய்யப் படுகின்றன.

இரவு எட்டு மணிக்குத் துவங்கும் கருட சேவையில் ஒன்பது பெருமாள்களும் தத்தம் கருட வாகனங்களில் எழுந்தருளி ஆலயத்திற்குள்







ஒருவர் பின் ஒருவராக நிற்க, ஆலயத்தின் பிரதான கதவுகள் அடைக்கப் படுகின்றன. வெளியே நம்மாழ்வார் அன்ன வாகனத்திலும், அவருடைய சீடரும் அவரையே பரம்பொருளாகப் பாடியவருமான மதுரகவி ஆழ்வார் தந்தத்தில் செய்த பிரம்பு நாற்காலி என்ற வாகனத்திலும் ஆயிரக்கணக் கான பக்தர்களும் வெளியே காத்திருப்பர்.



பின்னர் ஆலயக் கதவுகள் திறக்கப்படும். அதே நேரத்தில் ஒன்பது கருட வாகனப் பெருமாள்களுக்கும் தனித்தனியே ஆரத்தி காட்டப் படுவதை பக்தர்கள் மனங்குளிரக் கண்டு தரிசிக்கின்றனர். (இவ்வாறு ஒவ் வொரு பெருமாளுக்கும் வாயிற்கதவுகள் மூடப்பட்டு, பின் திறக்கப்பட்டு நடத்தப்படும் தீபாராதனையே கொடார வாசல் தீபாராதனை என்று இப்பகுதி மக்கள் அழைக்கின்றனர்).

ஒன்பது கருட சேவைகளையும் ஒரு சேர இவ்வாறு தரிசிப்பது ஒரு மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவம் என்று பக்தர்கள் கூறுகின்றனர்.

நம்மாழ்வாரும் தம் பிரபந்த பாசுரங்களால் மங்களாசாசனம் செய்திடுவார். பின்னர் மங்கள வாத்தியங்கள், பிரபந்த கோஷ்டி, வேத பாராயண கோஷ்டியோடு ஒன்பது கருட வாகனங்களும் ஒன்றன் பின் ஒன்றாக ஆலயத்தைச் சுற்றியுள்ள நான்கு மாட வீதிகளில் திருவீதி உலா வருகின்றனர்.



இந்த அற்புதமான காட்சியைக் காண கூடியிருக்கும் பக்தர்களின் பரவசமும், பக்திப்பெருக்கும் வார்த்தைகளால் வடிக்கவொண்ணாதவை. பிரதான மூர்த்திக்கென்று நடைபெறும் பிரம்மோத்ஸவத்திற்கு நிகராக ஆழ்வாருக்கு நடைபெறும் இந்த பிரம்மோத்ஸவம் இத்தலத்தின் தனிச் சிறப்பாகும். இந்த நவத் திருப்பதிகள் வைணவத்திற்குரிய நவக்கிரக பரிகாலத் தலங்களாகக் கருதப்படுகின்றன. இந்த வைகாசி விசாக தினத்தன்று இந்த புண்ணியத்திருத்தலத்திற்குச் சென்று எம்பெருமான் களின் கருட சேவை வைபவத்தினைக் கண்டு இன்னருளைப் பெறுவோம்.










# புத்தக மதிப்புரை

## வைணவ களஞ்சியம்

நூலாசிரியர் : திரு. முனைவர் மாடபூசி வரதராஜன்
கிடைக்குமிடம் : அனந்த் பதிப்பகம்
19/37, இரண்டாவது தளம், சுங்குவார் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
விலை/செல் : ரூ.200.00, 98418 84972.

வைணவ களஞ்சியம் எனும் இந்நூல் முனைவர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமியின் 94வது நூல் என்பது ஒரு மிக முக்கிய பாராட்டத்தக்க விஷயம். முனைவர் வரதராஜன் சுவாமி, பெரும் புகழாளரான திருப்பதி மகாவித்வான் ஸ்ரீஉ.வே. தி.அ. கிருஷ்ணமாசார்ய சுவாமியின் அத்யந்த சிஷ்யர். அவர் அடி பணிந்து அனைத்து வைஷ்ணவ ஸம்ப்ரதாய கிரந்தங்களையும் வரியடைவே கற்று, அறியக் கற்று வல்லா ரான வைணவச் செம்மல்.

களஞ்சியம் என்பது பொருள்களைச் சேமித்து வைக்கும் பண்டாரம். இங்கு வைணவம் பற்றிய பொருள்களைக் கொண்ட பண்டாரம் அன்று, வைணவமே மாந்தர் உயர்வுக்கு வழிகாட்டும் அரும்பொருள், செம்பொருள்களைக் கொண்ட நூல்களைக் கொண்ட களஞ்சியம் என ஆசிரியர் காட்டுகிறார்.

இந்நூலுக்கு ஓர் ஒப்புயர்வற்ற அணிந் துரையை ஸம்ப்ரதாயத்தில் ஊறித் திளைக் கும் திருக்குறுங்குடி பரமஹம்ஸ ஜீயர் சுவாமி அருளிச் செய்துள்ளார். அதில் திரு.ஜீயர் சுவாமி பிராட்டி வைபவத்தை எவ்வாறு பிள்ளை லோகாசார்யர் - வேதாந்த தேசிகர் இருவரும் ப்ரபந்நர் உய்வதற்கான புருஷகார விசேஷமாகக் காட்டியுள்ளனர் என்பதை விவரித்துள்ளார்.

இந்நூலில் ஏழு தலைப்புகளில் கட்டுரைகள் அமைந்துள்ளன. அவை: 1) லக்ஷ்மி கடாக்ஷ வைலக்ஷண்ய வைபவம் (ஆழ்வானின் ஸ்ரீஸ்தவ விளக்கம்). 2) ஆசார்ய ஹ்ருதயத்தின் பெருமை, 3) ஸார ஸங்கிரஹம் சரணாகதியில் விச்வாஸம், 4) மாமுனிகள் கண்ட மன்னன், 5) திவ்ய பிரபந்த உரையில் ஐதிஹ்ய நிர்வாஹங்கள், 6) திவ்ய பிரபந்த அரும்பத உரைகள் வரலாறு, 7) ஸ்ரீகோவிந்தராஜீயம் - சில விசேஷங்கள்.

1) பரபக்தி, பரஞானம், பரம பக்தி எனும் பரிணாமம் பிராட்டி விஷயத்திலும் உண்டு என்று ஆழ்வான் ஸ்ரீஸூக்திகளால் விளக்குவது மிக்க ரஸமாக உள்ளது.

2) திருவாய் மொழியின் பத்து பத்துகளையும், விளக்கியது ப்ரபன்னர்க்கு தேவாமிர்தம் ஆகும்.

3) ப்ரபன்னனுக்கு மிக முக்கியமானது மஹாவிஸ்வாஸம் எனும் துணிவு என விளக்கப்படுகிறது.

4) திருவாய்மொழி பாசுர ஸன்னிவேசத்தில் அகப்பொருள் விஷயங்களை மிக அழகாகச் சொல்வது பொருத்தம்.

5) ஆழ்வார்களின் பாசுரங்களை விளக்குகையில் ஆசார்யர்கள் பூர்வர்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை நினைவு கூர்வது தனிச்சிறப்பு.

6) எல்லா பாசுரங்களுக்கும் அரும்பதங்கள் சில சிறப்பான நுட்பமான பொருள்களை விளக்கும். இவையின்றி அந்த பாசுரங்களோ, வ்யாக்யானமோ முழு சுவை தாரா.

7) ஸ்ரீராமாயண வட மொழிக் காவியத்துக்கு நம் தமிழ் நாட்டவர் எழுதிய இவ்வுரை வட நாட்டினரும் மெச்சும் புகழ் மிக்கது. கோவிந்தராஜர் தம் வ்யாக்யானத்தை பெரிய வாச்சான் பிள்ளை உரையை அடியொற்றி அமைத்த திறம் நன்கு காட்டப்படுகிறது.

இத்தொகுப்பு ஒரே இடத்தில் பல நூல் நயங்களைக் காட்டும் சிறப்புக் கொண்டது. மேலும், பலப்பல இவர் இப்படி வழங்க வேண்டும் என்பது சுவைஞர் விருப்பம்.

**- திரு.தாமல் சடகோபன், சென்னை**




அலசுவோம்...
அறிவோம்...
ஆதிகாவிய நாயகர்களை...

# பகாசுரன்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,காஞ்சிபுரம்,
9486139685

ஸ்ரீமத்பாகவதம் என்னும் புனிதமான பெரும் புராணம், மஹாபாரதம் என்னும் மாபெரும் இதிகாசம் ஆகிய இரண்டிலுமே பகாசுரர்கள் இருவர் வருகின்றனர்.

பகம் என்றால் வடமொழியில் கொக்கு என்று பொருள் படும். குழந்தை கண்ணனைக் கொல்வதற்காகக் கம்சனால் ஏவப்பட்ட கொக்கின் வடிவம் கொண்ட அசுரனை பகவான் வதைத்தார். அவ்வசுரனுக்கு பகாசுரன் என்று பெயர்.

மஹாபாரதத்தில் வருகின்ற பகாசுரனோ பீமசேனனால் கொல்லப்பட்டவனாவான். இவ்வசுரன் பெருந்தீனி தின்பவனாதலால், இக்காலத்திலும் அளவுக்கு அதிகமாக உணவுண்பவர்களை பகாசுரர்கள் என்று அழைப்பது வழக்கத்தில் உள்ளது. பீமசேனனால் இந்த பகாசுரன் எவ்விதம் அழிய நேர்ந்தது என்பதை இங்கே காண்போம்.

பாண்டவர்களை எவ்விதத்திலாவது அஸ்தினாபுரத்திலிருந்து வாரணாவதம் என்ற நகருக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும், அந்நகரில் தாங்கள் நிர்மாணிக்கவுள்ள அரக்குமாளிகையில் அவர்களைத் தங்கச் செய்து அம்மாளிகைக்குத் தீவைத்து அவர்களைத் தந்திரமாகத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்றும் துரியோதனனும் அவனுடைய மாமனாகிய சகுனியும் திட்டம் தீட்டினர்.

பாண்டவர்களைத் தந்திரமாகக் கொல்லவேண்டும் என்ற துரியோதனனின் தீய நோக்கத்தினை அறிந்து கொண்ட விதுரர் சுரங்கம் தோண்டுவதில் திறமையுள்ள ஒருவனை வாரணாவதத்திற்கு அனுப்பி, அம்மாளிகையில் இருந்து வெளியேறும் வகையில் சுரங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன்வழியே பாண்டவர்களையும் குந்திதேவியாரையும் தப்பிக்க வைத்தார். அதன் பின்னர், விதுரரைத் தவிர்த்து, அஸ்தினாபுரத்திலுள்ள அனைவரும் பாண்டவர்கள் தீயில் சிக்கி அழிந்ததாகவே எண்ணினர்.

அரக்குமாளிகையிலிருந்து சுரங்கத்தின் வழியாகத் தப்பிய பாண்டவர்களும், அவர்களின் தாயாரும் காட்டுவழியில் பகவான் ஸ்ரீவேதவியாஸரைச் சந்தித்து, அவருடைய அறிவுரைப்படி ஏகசக்ரபுரம் என்ற ஊரினை அடைந்தனர்.

அவ்வூரில் உள்ள அந்தணர் ஒருவரிடம் தங்களை அந்தணபிரம்மச்சாரிகள் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு அவருடைய இல்லத்திலேயே தங்கிக்கொண்டு தினந்தோறும் பிக்ஷை எடுத்துக் கிடைக்கும் உணவைத் தங்கள் தாயார் குந்திதேவியிடம் கொடுத்தனர்.

கிடைக்கின்ற உணவைச் சரிபாதி ஆக்கி அதனை பீமனுக்குக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள உணவை தருமர், அர்ஜுனன், நகுலன், சகாதேவன், குந்திதேவியார் ஆகிய ஐவரும் பகிர்ந்து கொண்டனர். மகாபலசாலியும், பெரிய உருவம் கொண்டவனுமாகிய பீமசேனனுக்கு அந்த உணவு போதாமல் இருந்தது.

ஒருமுறை, பீமசேனன், குந்திதேவி இருவர் மட்டும் வீட்டிலிருந்த பொழுது அவர்களுக்கு இடம் கொடுத்த அந்தணனின் குடும்பத்தினர் புலம்பிக்கொண்டிருப்பதை




29.பகவத் ராமாநுஜர் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேப அதிகாரியாக யாரை நியமித்தார்?
திருக்குருகைப்பிரான்பிள்ளான்.

30.பெரிய திருமுடி அடைவு க்ரந்தத்தை அநுக்ரஹித்த பூர்வாசார்யர் யார்?
கோயில் கந்தாடை அண்ணன் திருக்குமாரரான கந்தாடைநாயன்.

31.அழகிய மணவாள ஜீயர் அநுக்ரஹித்த திருவாய்மொழி வ்யாக்யானம் எது? இவருடைய வைபவம் தெரிவிக்கும் உபதேசரத்னமாலை பாசுரம் எது? இவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் அநுக்ரஹித்த ஆசார்யர் யார்?
பன்னீராயிரப்படி (12000 படி), 45வது பாசுரம், பெரியவாச்சான் பிள்ளை

32.பூர்வாசார்யர்களுள் செடிக்கு மோக்ஷத்தை க்ருபை பண்ணின வள்ளல் யார்?
நம்பிள்ளை, மணவாள மாமுனிகள்.

33.நம்பிள்ளை எந்த மாதத்தில், எந்த நட்சத்திரத்தில் அவதரித்தார்?
கார்த்திகை மாதம், கிருத்திகை நட்சத்திரம்.

34.அநந்தாழ்வான் பரமபதித்த சமயத்தில் எந்த திவ்ய தேசப் பெருமாளை நினைத்துக் கொண்டார்?
அநந்தாழ்வான் அந்திம ஸமயத்தில் பராசர பட்டருக்கு இஷ்டமான அழகிய மணவாளப் பெருமாளை ஸ்மரித்தார்.

35.ராமாநுஜருடைய ஸ்ரீசரணங்களே எல்லா விதத்திலும் காப்பு என்று நிர்தாரணம் செய்யும் “சரமோபாய நிர்ணயம்” என்ற நூலை அநுக்ரஹித்த ஆசார்யர் யார்?
நயனாராச்சான் பிள்ளை.

**– தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

அறிந்து காரணம் என்னவென்று கேட்டனர். அதற்கு அந்த அந்தணர், வெகு காலத்திற்கு முன்பு இந்த ஊருக்கு பகாசுரன் என்ற அசுரன் ஒருவன் வந்தான். நினைத்த நேரத்திற்கு ஊருக்குள் வந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் அவன் அடித்துத் தின்று விட்டு, ஊருக்கு வெளியில் உள்ள குகைக்குச் சென்று தூங்கி விடுவான். இந்நிலையில், ஊர்மக்களாகிய நாங்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு முடிவு செய்தோம்.

அதன்படி வாரத்திற்கு ஒரு நாள் இரட்டை மாடுகள் பூட்டிய வண்டியில் ஏராளமான உணவைத் தயார் செய்து எடுத்துக்கொண்டு எங்களில் ஒருவர் அந்த வண்டியை ஓட்டிச் செல்வோம். பகாசுரன் அந்த உணவு அத்தனையையும் உண்பதுடன், மாடுகளையும், வண்டி ஓட்டிச் செல்பவரையும் விழுங்கிவிட்டு குகைக்குள் சென்று விடவேண்டும் என்பதை அந்த பகாசுரனும் ஒப்புக் கொண்டு விட்டான். இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு அவ்வசுரன் நினைத்தபொழுதெல்லாம் ஊருக்குள் வந்து எங்களை இம்சிப்பதில்லை.

இன்றையதினம், உணவுடன் கூடிய மாட்டு வண்டியை நான்தான் ஓட்டிச் செல்ல வேண்டும். வண்டியை ஓட்டிச் சென்று பகாசுரனுக்கு உணவாகிறேன் என்று நான் கூறிவிட்டேன். அதற்காகத்தான் இவர்களெல்லாம் கலங்குகின்றார்கள் என்று விரிவாகக் கூறினார்.

இதைக் கேட்ட குந்திதேவியார், அந்தணரே, கவலையை விடுங்கள். உங்களுக்குப் பதிலாக மகாபலசாலியாகிய என் மகன் பீமன் வண்டியை ஓட்டிச் செல்லட்டும். அந்த பகாசுரனின் கதையை பீமசேனன் முடித்துவிடுவான் என்று கூறினாள்.

அவ்வந்தணரோ, எங்கள் இல்லத்தில் விருந்தினர்களாகத் தங்கியிருக்கும் உங்களில் ஒருவரை பலியிட்டு எனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வது பாவம். எனவே, நானே சென்று அந்த அசுரனுக்கு இரையாகிறேன் அம்மா! என்று கூறிவிட்டார்.

கவலைப்படாதீர்கள் அந்தணரே! என் மகன் மிகவும் பலசாலி. அந்த பகாசுரனை என் மகன் நிச்சயம் கொன்றுவிடுவான். இதன் மூலம் இந்த ஏகசக்ராபுரத்து மக்கள் இனி வருங்காலத்தில்

பயம் எதுவுமின்றி வாழலாம் என்று சம் மதிக்க வைத்தாள். அதைத் தொடர்ந்து, அசுரனுக்காகத் தயாரிக்கப்பட்ட ஏராள மான உணவுடன் கூடிய வண்டியை பீம சேனன் ஓட்டிச் சென்று, பகாசுரனுடைய குகைக்கு முன்பாக அமர்ந்து கொண்டு சாவகாசமாகச் சாப்பிட்டான். பசியின் மிகுதியால் குகைக்கு வெளியில் வந்த பகாசுரன், தனக்கான உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த பீமசேனனு டன் சண்டையிட்டு மடிந்து போனான்.

பகாசுரனின் மரணத்தால் நிம்மதி அடைந்த ஏகசக்ராபுரத்து மக்களும் குந்தி தேவியையும், பீமசேனன் உள்ளிட்ட பாண்டவ சகோதரர்களையும் பாராட்டி மகிழ்ந்தனர்.

பகாசுரன் குறித்து மேற்கண்ட மகா பாரத நிகழ்வு சென்ற யுகங்களில் சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல் என்னும் அறத்தினை அசுரர்களும் பின்பற்றியதை எடுத்துக்கூறி நம்மை வியக்கவைக்கிறது.

நினைத்தபொழுதெல்லாம் ஏகசக்ர புரத்திற்குள் வந்து இஷ்டப்படி அடித்துத் தின்ற பகாசுரன், வாரம் ஒருமுறை தனக்கான உணவு கிடைக்கும் என்ற ஒப்பந்தத்தை அடுத்து, அந்த உணவு வரும்வரையில் தனது குகையிலேயே தங்கியிருந்தான் என்பதை நினைக்கும் பொழுது, முந்தைய யுகங்களில் அசுரர்க ளும் கூட சொன்ன சொல்லுக்குக் கட்டுப் பட்டனர் என்பது தெரியவருகின்றது.

மேலும், தங்கள் உயிரைக் கொடுத்து விருந்தினரின் உயிரைப் பாது காக்க வேண்டும் என்றும், தங்களுக்குத் தஞ்சம் அளித்தவர்களை ஆபத்திலிருந்து காப்பது விருந்தினரின் கடமை என்றும் அந்த யுகத்தின் மக்கள் சிந்தித்ததை எண்ணும்பொழுது, நமது உள்ளம் வியப்பால் விரிகின்றது அல்லவா?

*தொடர்ந்து அலசுவோம்...*



## பத்மாவதித் தாயார் தெப்போத்ஸவத்தில்



ஆனி மாத ஏகாதசி முதல் பௌர்ணமி வரை 5 நாட்கள் நடைபெறும் தெப்போத்ஸவ முதல் நாள் மாலை ருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீகிருஷ்ணர் கண் கவரும் பல வண்ண மின் விளக்குகள், வேத நாதங்களின் நடுவே, மங்கள வாத்தியங்கள் முழங்க, அன்னமய்யா சங் கீர்த்தனைகளை கேட்டப்படி தெப்பக்குளத்தில் உலா வருவர்.

2ஆம் நாளான துவாதசியன்று ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியும், மூன்றாம் நாள் திரயோதசி அன்று மாலை ஸ்ரீபத்மாவதித் தாயார் திருச்சியில் சர்வ ஆபரணங்கள் மற்றும் புஷ்ப ஹாரங்களால் அழகாக அலங்கரித்து தெப்பத்தில் மும்முறை வலம் வரச் செய்வர்.

4வது நாள் 5 முறை வலம் வந்த பின் தெப்பக் குளத்தில் இருந்து பத்மாவதித் தாயார் தங்க கஜ வாகனத்தில் எழுந்து அருளி “கஜலட்சுமி”யாக பக்தர்களுக்கு தரிசனம் அளிப் பாள். 5ஆம் நாள் பௌர்ணமி அன்று வெண்ணிலா ஒளி யில் தாயார் தெப்பத்தில் 5 முறை பிரதக்ஷணமாக உலா வந்த பின்னர் கருட வாகனத்தில் எழுந்தருகிறாள்.

ஸ்ரீபத்மாவதித் தாயார் கலியுகத்தில் பத்மசரோவத்தை தன் பிறந்த வீடாக நினைத்து தெப்பத்தில் குளிர்ந்த நீரில் அகம் குளிர்ந்து, உலா வந்து பக்தர்களுக்கு அருளுகிறாள்.





# கோதுமை



தெலுங்கு மூலம்:
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, திருப்பதி.

வேதசாஸ்திரங்களின் கூற்றின்படி நவகிரகங்களில் சூரியனுக்கு மிகவும் உகந்தது கோதுமையாகும். கோதுமையால் அல்வா, போலி, பாயசம், உப்புமா, அப்பம் போன்றவை தயாரிக்கலாம்.

கோதுமையை அகன்ற மண்பானை (அ) இரும்பு கடாயில் கருமையாக ஆகும் வரை சூடு செய்து ஆறவைத்து, பொடி செய்து கொண்டு நன்கு ஜல்லித்து, நாள்தோறும் காலை–மாலை இருவேளை 2–3 கிராம் பொடியைத் தேனுடன் சேர்த்து சாப்பிடலாம். இவ்வாறு செய்வதால் மாதவிடாய் இரத்தப் போக்கு குறையும்.

ஒரு மண்/இரும்பு கடாயில் 50கிராம் கோதுமை, மஞ்சள் கொம்புகளை சிவப்பாக மாறும் வரை வறுத்து பொடி செய்து நாள்தோறும் காலை, மாலை வேளைகளில் 2–3 கிராம் பொடியை வாயில் போட்டு வெதுவெதுப்பான நீருடன் உட்கொண்டு வந்தால் சுவாசக் கோளாறுகள் குறையும்.

கோதுமை, பாதாம், கற்கண்டு, கருவேலம் பிசின் ஆகிய பொடிகளை சம அளவு எடுத்துக்கொண்டு நாள்தோறும் வேளைக்கு 5–10 கிராம் பொடியை 100 மி.லி. பாலுடன் கலந்து குடித்து வந்தால் உடல் எடை குறையும். (கருவேலம் பிசினை நெய்யில் நன்கு வறுத்து பொடி செய்ய வேண்டும்.)

கோதுமை, அரிசி, கம்பு, சோளம், பாசிப் பயறு, கொள்ளு, பார்லி போன்றவற்றை கால் கிலோ வீதம் எடுத்துக்கொண்டு இரவு முழுவதும் நீரில் நன்கு ஊற வைத்துக் கொள்ளவும். மறுநாள் காலை வெயிலில் நன்கு காயவைத்து, பின்னர் வறுத்து பொடி செய்து, நாள்தோறும் இரவில் சப்பாத்தி ரொட்டி போன்று செய்து கொண்டு நீரில் வேகவைத்த காயுடன் உட்கொண்டால் உடல் எடை குறையும்.

250 கிராம் கோதுமை மாவுடன் 1–3 டீஸ்பூன் விளக்கெண்ணெய் கலந்து, தகுந்தளவு நீருடன் மாவை நன்கு பிசைந்து நாள்தோறும் இரண்டு ரொட்டியை உட்கொண்டால் மலச்சிக்கல் குறையும்.

கோதுமை, பார்லி ஆகியவற்றை சமஅளவு எடுத்துக் கொண்டு தனித்தனியாக சிறிது நெய்யில் வறுத்து பொடி செய்து டப்பாவில் போட்டு வைத்துக் கொண்டு நாள்தோறும் ஓரிரண்டு முறை தகுந்தளவு பொடியைப் பாலில் போட்டு தகுந்தளவு சர்க்கரை கலந்து குடித்து வந்தால் உடலில் சக்தி ஏற்படும். இதை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அருந்தலாம்.

கோதுமையை ஓரிரண்டு மணி நேரம் ஊறவைத்து, மிக்ஸியில் போட்டு மிருதுவாக அரைத்து தகுந்தளவு தேன் கலந்து கழுத்தின் மீது பூசி ஒரு மணி நேரம் கழித்து கழுவினால் கருமை விலகும்.

நாள்தோறும் இரவு 60 கிராம் கோதுமையை ஊற வைத்து காலை ஒரு டீஸ்பூன் தனியா, அரை டீஸ்பூன் கசகசா ஆகியவற்றை சேர்த்து நன்கு அரைத்து 200 மி.லி. பாலில் கலந்து கொதிக்க வைத்து குடித்தால் இடுப்பு வலி குறையும்.

கோதுமை மாவு, ஊமத்தம் காய் விதைகள் நன்கு பொடி செய்து, தகுந்தளவு நீருடன் சேர்த்து மிருதுவாக அரைத்து உடலில் அவசியமற்ற இடங்களில் உள்ள உரோமத்தின் மீது தடவினால் அவை உதிர்ந்து விடும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.



# ஜீன் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் செலவுகள் அதிகமாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. செலவிற்கேற்ற வரவு உண்டு.தொழில் விஸ்தரிப்புக்கான ஏற்பாடுகள் செய்யலாம். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டு. பெற்றோரால் அனுகூலம் உண்டு. சகோதரர்களால் அதிக நன்மையுண்டு. சுபச் செலவாகும் மாதமிது.

**ரிஷபம்**

குடும்பத்தில் விரைவில் சுபகாரியங்கள் நடக்கும். தொழிலில் நல்ல லாபமுண்டு. அரசியல்வாதிகளுக்கு யோகமும், அனுகூலமும் உண்டு. இளைய சகோதரனின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. புதிய வாகனங்கள் வாங்கலாம். நிறைவான யோகத்தையும், முன்னேற்றத்தையும் பெறும் மாதமிது.

**மிதுனம்**

புத்திசாலித்தனமாக காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். தெய்வ யாத்திரை பலன் உண்டு.சகோதர வழியில் தன லாபம் உண்டு. தொழிலில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.தாராள பணப்புழக்கம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு.கணவன் மனைவிக்குள் பிரச்சனைகள் தீரும்.மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நிறைவான புகழ் பெறும் மாதமிது.

**கடகம்**

குடும்பத்தில் செலவினங்கள் அதிகமாகும். பிறருடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். புது முயற்சிகளில் தாமதமாக வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை.உங்கள் ஜாதக தோஷத்திற்குப் பரிகாரம் செய்ய ஏற்ற மாதமிது.பண விஷயத்தில் மிகுந்த அக்கறை தேவை. தெய்வ வழிபாட்டின் மூலம் ஓரளவு நன்மை நடைபெறும் மாதமிது.

**சிம்மம்**

தொழில்துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். தாமதமாகக் காரியங்கள் சாதிக்க முடியும். தாயார் மற்றும் மனைவியின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. கணவன் மனைவிக்குள் வாக்குவாதம் தவிர்க்கவும். வரவிற்கேற்ற செலவு உண்டு. மாணவர்கள் கடும் முயற்சி செய்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தாமதமாக முன்னேற்றம் பெறும் மாதமிது.

**கன்னி**

திருஷ்டியின் காரணமாகக் காரியங்கள் தாமதமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய இடமாற்றமும், சம்பள உயர்வும் கிடைக்கும். மாதத்தின் முன்பகுதியில் தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கும். யாத்திரையால் நல்ல தரிசனம் கிடைக்கும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. ஆரோக்கியத்தில் உள்ள குறைபாடுகளுக்கு மருத்துவம் கிடைக்கும். போட்டியில் வெற்றி பெறும் மாதமிது.

**துலாம்**

தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பூர்வீகச் சொத்துக்களில் பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரி ஆகும். கருவுற்ற பெண்கள் பயணங்களைத் தவிர்க்கவும். கணவன் மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். பழைய பாக்கிகள் வசூலாகும். தெய்வ பலத்தினால் முன்னேறும் மாதமிது.

**விருச்சிகம்**

தொழில் துறையில் அலைச்சல் அதிகமாகும். குழந்தைகள் படிப்பிற்காகவும், தொழிலுக்காகவும் நெடுந்தூரம் செல்வர். பணவிஷயத்தில் மிகுந்த அக்கறை தேவை. பண பரிவர்த்தனை தவிர்க்கவும். சொத்துக்கள் குறித்து பேசவேண்டாம். கர்பிணிகள் பிரயாணத்தைத் தவிர்க்கவும். தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**தனுசு**

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். கூட்டு வியாபாரம் அதிக லாபத்தை அளிக்கும். கணவன்–மனைவி பிரச்சனைகள் தீரும். குழந்தைகள் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கர்பிணிகள் பிரயாணத்தைத் தவிர்க்கவும். பூர்வீகச் சொத்து பேச்சு வேண்டாம். பெற்றோர் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தெய்வ அருளினால் முன்னேறும் மாதமிது.

**மகரம்**

கடன் வாங்கி, வீடு வாங்கும் யோகம் உண்டு. கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். வயிறு உஷ்ணமடையும். மனைவி ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் வாக்குவாதம் தவிர்க்கவும். தாய் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். ஜாமீன் போடுவது, சொத்துக்கள் குறித்து பேசுவது வேண்டாம். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**கும்பம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். குழந்தை பாக்கியம் கிட்டும். தனக்கு கீழ் பணி புரிபவர்களால் நன்மையுண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழிலில் இருந்த கடன் சுமை குறையும். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. விரைவில் வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. நல்ல முன்னேற்றம் பெறும் மாதமிது.

**மீனம்**

தொழில் அலைச்சலால் தூக்கமின்மை, குழந்தைகள் ஆரோக்கியத்தில் மருத்துவ செலவுகள் உண்டாகும். சகல காரியங்களும் தாமதமாக நடக்கும். தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். நண்பர், உறவினர் உதவுவர். பழைய பாக்கிகள் வசூலாகும். பெற்றோர் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. முயற்சியால் வெற்றி பெறும் மாதமிது.

கீர்த்தி மூர்த்தி ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஅப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் சுவாமிகளின் 100 வது திருநட்சத்திரத்தை முன்னிட்டு அந்த ஸ்வாமிகள் எழுதிய சிறப்புக்கட்டுரை



# இராமடம் ஊட்டுதல்!

**தன்னை வேண்டாத பிள்ளையை விடமாட்டாமல் பரிந்து ஊட்டும் ஒரு தாயின் பரிவே இந்தக் கதை**

திவ்யப் பிரபந்தங்களுக்கு மணிப் பிரவாள நடையில் உரை வகுத்த வைணவப் பேராசிரியர்கள், “இராமடம் ஊட்டுவாரைப் போல” என்று ஒரு தொடரை உபயோகிப்பது வழக்கம். அத்தொடரில் ஓர் அழகிய உண்மை உவமைக் கதையை நாம் அனுபவிக்கலாம்.

பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பார்கள். ஏறக்குறைய அதைப் போலவேதான் பெற்ற தாயினிடம் மகன் பரிவுடன் நடந்து கொள்வதில்லை. அது மட்டுமில்லை; அவள் காட்டும் பரிவுக்கும் இடம் கொடுப்பதில்லை. தாயைக் கண்டாலே வேம்பாகக் கசக்கிறது அவனுக்கு. காரணமில்லாமல் இப்படிப்பட்ட ஒரு பைத்தியக்காரத்தனம் மகனிடம் இருக்கிறது. “மகனோ சிறுவன்; இரண்டுங்கெட்டான்; புத்திசாலியாக இல்லை” என்கிறார்கள் ஊரார்.


“அவன் புத்தி எப்படி இருந்தாலும் பரவாயில்லை. நான் போடுகிற சோற்றையாவது சாப்பிட்டு விட்டுப் போகக்கூடாதா? இல்லாவிட்டால் அவன் உடம்பு வாடிப் போகுமே” என்று ஏங்குகின்றாள் தாய். அவனோ பிடிவாதமாக அவளை வெறுத்து விலகி ஓடுகிறான். அவள் போடுவதானால் சோறே வேண்டாம் என்கிறான். பசி வந்தால் எங்காவது சத்திரம் சாவடி என்று பிறரிடம் போய் நிற்கிறான். சத்திரக்காரர்கள் இரண்டொரு நாள் அவனுக்குச் சோறு போடுகிறார்கள். தினமும் வந்து நின்றால் யார் தான் போடுவார்கள்? அவர்கள் விரட்டுகிறார்கள். சோறில்லாமல் அலைகிறான். அப்போதும் தாயிடம் திரும்ப மறுக்கிறான்.

இதையெல்லாம் ஊரார் தாயிடம் சொல்ல அவள் மனம் துடிக்கிறது. தன்னிடம் நேரே சோறு தின்பதை இப்படி வெறுக்கிறதே இப்பிள்ளை என வேதனைப்படுகிறாள். முடிவில் யோசித்து ஒரு வழி கண்டுபிடிக்கிறாள்.

மறைந்து நின்று... பையன் சோற்றுக்காக வந்து நிற்கும் சத்திரங்களுக்கு அவனுக்குத் தெரியாமல் இரவிலே தான் போகிறாள். அங்குள்ளவர்களிடம் வேண்டிக் கொள்கிறாள்.


“நான் தரும் சோற்றை நீங்களாகப் போடுவது போல் இந்தப் பையனுக்குப் போடுங்கள். இல்லை என்று விரட்டாதீர்கள். நான் போடுவதாகத் தெரிய வந்தால் அவன் உண்ணமாட்டான். தயை செய்யுங்கள்” என்று கூறி, தன்னை மறைத்து அவன் சோற்றுக்கு ஓர் ஏற்பாடு செய்து விடுகிறாள்.

சத்திரக்காரர்கள் பையனுக்கு இல்லை என்னாது சோறு போடுகிறார்கள். மகனுக்குச் சோறு கிடைக்கிறது. தாய் மனம் குளிருகிறது.



# பல்சுவைப் பகுதி

## எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




## படத்தைப் பாருங்கள் !





வண்ணம் தீட்டுங்கள் !!

இந்தச் சிறுமிக்கு யோகா கலையில் வந்த சந்தேகத்திற்குத் தெளிவு பெற ஆசிரியரை சென்றடைவதற்கான பாதையைத் தேர்ந்தெடுங்கள்!







இந்தப் படங்களைப் பாருங்கள்! வேறுபடுத்தி விடை அறியுங்கள்!!

மேற்காணும் இசைக்கருவிகளில் இந்திய இசைக்கருவிகளை கண்டு எழுதவும்.

விடை : 1,2,3,4,7

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-35

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. நம்மாழ்வார் யாருடைய அம்சமாக அவதரித்தார்..........
2. திருமலையில் திருமால் தன் திருப்பாதங்களை முதலில் பதித்த இடத்தின் பெயர் ..........
3. திருக்கடிகை திவ்ய தேசத் தாயாரின் திருநாமம்..........
4. நோய் தீர்க்கும் மருந்தாக நம்மாழ்வார் யாரைக் குறிப்பிடுகின்றார் ..........
5. ஊண்மிக விரும்பு என்று கூறியவர் ..........
6. திருக்கடிகை திவ்யதேசம் அமைந்துள்ள ஊரின் பெயர்..........
7. ஆணும் பெண்ணும் இணைந்த சிவவடிவத்தின் பெயர்..........
8. கூரத்தாழ்வான் யாருடைய அம்சமாகத் தோன்றியதாகக் கூறுவர்..........
9. திருப்பதி அருகே ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ள ஊர் ..........
10. ஒன்பது கருட சேவை நடைபெறும் திவ்ய தேசம்..........
11. ஜனகருக்கு வேங்கடாசல மகிமைகளைக் கூறியவர் ..........
12. கூரத்தாழ்வானின் அவதார மாதம் நட்சத்திரம் ..........
13. நீலோற்பவ மலரில் தோன்றிய ஆழ்வாரின் திருநாமம்..........
14. திருக்கடிகை திவ்ய தேசத்தில் அருள்புரியும் திருமாலின் திருநாமம்..........
15. வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் அவதரித்த ஆழ்வார்..........

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.06.2025.

**விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!



| சக்கரம் | விடை |
|---|---|
| திருமலையில் நீர் வீழ்ச்சியாக பாயும் கங்கை | |
| திருவேங்கடவன் எத்தனை மலைகள் மேல் நின்றருளுகிறார் | |
| திருவேங்கடவனின் ஆலயத்தில் படியாக கிடந்தருளும் ஆழ்வார் | |
| திருவேங்கடவன் ஆலய கர்ப்பகிருக விமானத்தின் பெயர் | |
| திருமலை திருக்குளத்தின் பெயர் | |
| திருமலையை ஏறுவதற்கு அழைக்கும் விதமாக நின்று அருளுபவர் | |
| ஸ்ரீதேவி, பூதேவியர்களை இவ்வாறும் அழைப்பர் | |
| திருமலையில் முதல் பூஜை இவருக்கே! | |

## விடைகள்

1) ஆகாசகங்கை, 2)ஏழு மலைகள், 3) குலசேகராழ்வார், 4) ஆனந்த நிலையம், 5) ஸ்வாமி புஷ்கரணி, 6) கருடாழ்வார், 7) உபய தேவியர் 8) வராஹ ஸ்வாமி.

## கணித விளையாட்டு

இங்கு மண்பானையில் உள்ள கணித விடைக்குப் பொருத்தமான தட்டுகளின் விடையைப் பொருத்துக

| பானை | கணக்கு |
|---|---|
| 1 | 28-4 |
| 2 | 21+2 |
| 3 | 12+7 |
| 4 | 12-7 |
| 5 | 32+7 |

| தட்டு | எண் |
|---|---|
| i | 23 |
| ii | 39 |
| iii | 24 |
| iv | 19 |
| v | 21 |
| vi | 5 |

### விடைகள்

1) iii, 2) i, 3) iv, 4) vi, 5) ii

---

கோடை விடுமுறை முடிந்துவிட்டது. மழலை செல்லங்களே! இங்குள்ள பொருட்களைப் பார்த்தால் உமக்கு எது நினைவிற்கு வருகிறது?

குழந்தைகளே! நீங்கள் இந்த வருடம் நன்கு படித்து சாதனைகள் பல புரிந்திட ஸப்தகிரி மாத இதழ் வாழ்த்துகின்றது.



விடை : கோடைக்காலம்

சித்திர கதை

# கண்ணனின் திருலீலை

கதை மூலம் :திருமதி ஜெ.பத்மினி பிரியதர்ஷினி
சித்திரம் :திரு. கே.துவாரகாநாத்




கண்ணன் ஏன் நின்று விட்டான் என எண்ணினான் மாயாவி.
அனைவரும் சென்று விட்டனரே சேல்லும் வழி எங்கே?
மலைப்பாம்பின் உள்ளே செல்லாமல் அதன் தொண்டைக் குழியிலேயே நின்று விட்டான்.
நான் முக்தி அடைவேனோ?
அதற்குள் கண்ணன் தன்னுடைய வடிவினை பெரிதாக்கினான்.
மலைப்பாம்பாக இருந்த அசுரனின் தொண்டை வலித்தது. உயிர் ஊசலாடியது.
கண்ணனின் வடிவம் அபரிமிதமாக வளர்கின்றதே?
மலைப்பாம்பு வலியால் துடிதுடித்தது.
எனக்கு என்னவாயிற்று?
சிறிது நேரத்தில் அதன் தலையானது துண்டு துண்டாக சிதறி விழுந்தது. அதன் வாயினுள் நுழைந்த கோபாலகர்கள் வெளியே வந்து ஆச்சரியமுடன் அதைக் கண்டனர்.
யாவும் கண்ணனின் மகிமையே. மலைப் பாம்பின் உடலிலிருந்து ஒரு ஒளி வெளியே வந்து கண்ணனுள் ஐக்கியமானது.
சாபவிமோசனம் பெற்று அவ்வசுரன் தன் சுய வடிவம் கொண்டான். கண்ணனால் முக்தி அடைந்தான்.
பேறு பெற்றேன் ஸ்வாமி! உம் தரிசனப் பாக்கியம் பெற்றேன்.
தெய்வ மகிமை எத்தனை பாவங்களிலிருந்தும் நம்மை காத்திடும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________
_______________
_______________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர் களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களை யும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும்*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஒ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.


**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.



Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D.,P.G.Dip in Ephigraphy, Dip. in Yoga on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



30-04-2025 அன்று ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணம் அருகில் உள்ள சிம்மாசலம் ஸ்ரீவராகலக்ஷ்மிநரசிம்ம ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்களைச் சமர்பித்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள்



ஸ்ரீராமநவமியை முன்னிட்டு தெலுங்கானா மாநிலம் பத்ராசலம் ஸ்ரீசீதாராம திருக்கல்யாணத்தை முன்னிட்டு 06-04-2025 அன்று தி.தி.தே சார்பில் பட்டு வஸ்திரங்களைச் சமர்பித்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள்



11-04-2025 அன்று ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமிக்கு வைர கிரீடத்தை நன்கொடையாக தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் அவர்களிடம் வழங்கிய பென்னா சிமெண்ட் தலைவர் திரு.பி.பிரதாப் ரெட்டி அவர்களுடன் தி.தி.தே. செயலாட்சித்தலைவர்



06-04-2025 அன்று இந்திய உச்சநீதிமன்ற முதன்மை நீதியரசர் திரு.சஞ்சீவ் கண்ணா அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித்தலைவர் அவர்கள்



19-04-2025 அன்று திருமலை முதல் மலைவழிச்சாலையில் தூய்மை ஆந்திரா - தூய்மை திருமலை திட்டத்தின் கீழ் தி.தி.தே. ஊழியர்களோடு உறுதிமொழி ஏற்கும் கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



20-04-2025 அன்று திருமலை மாத்ருஸ்ரீதரிகொண்ட வெங்கமாம்பா அன்னதானக் கூடத்தில் பக்தர்களுக்கு உணவினைப் பரிமாறும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள்



SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-05-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

# அப்பளாயகுண்டா
# ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்
# 07-06-2025 முதல் 15-06-2025 வரை